சனவரி
2018

# வழிகாட்டல் 2018

## 2018 இற்கும் அதற்கு அப்பாலுக்குமான நாணய மற்றும் நிதியியல் துறைக் கொள்கைகள்

இலங்கை மத்திய வங்கி

# வழிகாட்டல்:

# 2018 இற்கும் அதற்கு அப்பாலுக்குமான நாணய மற்றும் நிதியியல் துறைக் கொள்கைகள்

சமர்ப்பிப்பவர்

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி

ஆளுநர்

இலங்கை மத்திய வங்கி

2018 சனவரி 3

## 1. அறிமுகம்

மேதகையீரே, நாணயச்சபை உறுப்பினர்களே, மூத்த துணை ஆளுநரே, துணை ஆளுநர்களே, உதவி ஆளுநர்களே மற்றும் மத்திய வங்கி அலுவலர்களே, கௌரவமிக்க விருந்தினர்களே, சீமாட்டிகளே, கனவான்களே,

முதலில், இவ்வாண்டிற்கான வழிகாட்டலைச் சமர்ப்பிக்கும் இந்நிகழ்விற்கு வந்திருக்கும் தங்களை மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

2007இல் ஆரம்பிக்கப்பட்ட எமது பாரம்பரியத்தினை தொடரும் விதத்தில் இலங்கை மத்திய வங்கியின் பதினோராவது வழிகாட்டலை இன்று நாம் பணிவுடன் சமர்ப்பிக்கிறோம். எமது எதிர்காலக் கொள்கை நெறிப்படுத்தல்களையும் நடவடிக்கைகளையும் பகிர்ந்து கொள்வது உங்களின் வியாபார நடவடிக்கைகளின் போக்கினைக் கூடுதலானளவிற்கு நிச்சயமான தன்மையுடன் திட்டமிட்டுக் கொள்ள உதவும் என்பது எமது நம்பிக்கையாகும். எமது இவ்வழிகாட்டலானது எமது கொள்கைகளை வெளிப்படையாகவும் தெளிவாகவும் விளங்கிக் கொள்வதனை அதிகரிக்கும் என நான் நம்புகிறேன். இது உங்கள் இலக்குகளைக் கூடியளவிற்குக் காத்திரமான முறையில் அடைவதற்கு உங்களுக்கு உதவும். உங்கள் வியாபாரத்தின் வெற்றிகரமான பெறுபேறுகள் இறுதியில் எமது கொள்கைகளை இலங்கைப் பொருளாதாரம் மற்றும் மக்கள் ஆகிய இரண்டினது நன்மைக்களுக்காக மிகக் காத்திரமான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு எமக்கு உதவும்.

**2017ஆம் ஆண்டு சவால் நிறைந்ததாக இருந்தது.** கொந்தளிப்பான வானிலை நிலைமையின் காரணமாக பொருளாதார ரீதியான தாக்கங்களை நாம் கண்டிருக்கிறோம். வரட்சியும் வெள்ளமும் வேளாண்மை நடவடிக்கைகளையும் வேளாண்மையினை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில் நடவடிக்கைகளையும் தடங்கலுறச் செய்தன. இம்மோசமான வானிலை நிலைமைகளிலிருந்து கசிந்த தாக்கங்கள் பொருளாதாரத்தின் மற்றைய துறைகளையும் பாதித்தன. இதன் விளைவாகப் பொருளாதார வளர்ச்சியானது ஆண்டின் தொடக்கத்தில் குறைவானதாகவும் எறிவு செய்யப்பட்டதிலும் பார்க்கக் குறைவானதாகவும் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினை மீண்டும் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் நடைமுறைப்படுத்தப்பட்ட மத்திய வங்கியின் இறுக்கமான நாணயக் கொள்கை நிலையும் அதேபோன்று அரசாங்கத்தின் ஒப்பீட்டு ரீதியான இறுக்கமான இறைக் கொள்கை நிலையும் அரச மற்றும் தனியார் முதலீட்டுச் செலவிடலை ஓரளவிற்குப் பாதித்து தாழ்ந்த பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களித்தன. நுகர்வோர் விலைப் பணவீக்கம் அதிகரித்தமைக்கு, வானிலையுடன் தொடர்பான உள்நாட்டு வழங்கல்களில் காணப்பட்ட தடங்கல்கள், மறைமுக வரிகளுக்குச் செய்யப்பட்ட திருத்தங்கள் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்களின் அதிகரித்த விலைகள் என்பனவற்றுடன் சேர்ந்து காணப்பட்ட உயர்ந்த உணவு விலைகள் முக்கிய காரணமாக அமைந்தது. இது பணவீக்க எதிர்பார்ப்புக்களை வழிநடத்துவதற்கான எமது முயற்சிகளை சவாலுக்குட்படுத்தியது. மத்திய வங்கியினால் இறுக்கமான நாணயக் கொள்கை நிலை பேணப்பட்டமைக்கிடையிலும் ஆண்டின் இறுதியில் எதிர்பார்க்கப்பட்ட மட்டங்களுக்கு

வீழ்ச்சியடைவதற்கு முன்னதாக 2017இன் பெரும்பாலான காலப்பகுதியில் நாணயக் கூட்டுக்களின் வளர்ச்சி உயர்வாகவே காணப்பட்டது. மத்திய வங்கியின் நெகிழ்ச்சித்தன்மை கொண்ட செலாவணி வீதக் கொள்கையின் காரணமாக ஏற்றுமதிகளில் உறுதியான மீட்சிக்குரிய சமிக்ஞைகளை நாம் கண்ட போதும், பெருமளவில் இறக்குமதிகள் மீதான செலவினத்தில் வானிலை நிலைமையினால் தூண்டப்பட்ட அதிகரிப்புக்களின் விளைவாக வர்த்தகக் கணக்கு தொடர்ந்தும் பாதிக்கப்பட்டது. தொழிலாளர் பணவனுப்பல்களின் வீழ்ச்சி வெளிநாட்டு நடைமுறைக் கணக்கில் விரிவடைந்து செல்லும் வர்த்தகப் பற்றாக்குறையினை ஈடுசெய்வதில் ஒரு குறைவிற்கு வழிவகுத்தது. இறைத் துறை அரசிறைச் சேகரிப்பின் நியதிகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைக் காட்டியதெனினும் வானிலையுடன் தொடர்பான இறைச் செலவுகள் மற்றும் உயர்வு வட்டிக் கொடுப்பனவுகள் என்பனவற்றின் முக்கிய விளைவாக 2017இல் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையில் சில பிறழ்வுகள் காணப்படக்கூடும். எதிர்பார்க்கப்பட்ட இறைத்திரட்சிப் பாதையினை அடைவதன் மீது இது மோசமான தாக்கத்தினைக் கொண்டிருக்கும் வேளையில் நாணய மற்றும் செலாவணி வீத கொள்கையினை நடத்துவதில் சிக்கலானதன்மையினையும் ஏற்படுத்துகிறது.

இச்சவால்களுக்கு மத்தியிலும், அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட பல கொள்கை வழிமுறைகளினூடாக பல துறைகளிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினைக் காட்டிய ஆண்டாக 2017 காணப்பட்டது. இவ்வழிமுறைகளுக்குப் பதிலிறுத்தும் விதத்தில் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடு அடையப்பட்டு வருவதுடன் தற்பொழுது எமது பொருளாதாரம் சரியான திசையை நோக்கிப் பயணிக்கிறது. பொருளாதாரம் மற்றும் விலை உறுதிப்பாட்டையும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டையும் பேணுகின்ற மையக் குறிக்கோள்களை எய்தும் பொருட்டு மத்திய வங்கி 2017இல் முன்கூட்டிய செயற்பாடு சார்ந்த வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியிருக்கிறது. நாட்டின் ஒட்டுமொத்த பேரண்டப் பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துவதற்காக மூன்று கட்டமைப்புக்கள் நடைமுறைக்கிடப்பட்டிருந்தன. அவற்றை நிறுவனமயப்படுத்துவதற்கும் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. மத்திய வங்கி முன்கூட்டிய செயற்பாடு சார்ந்த மற்றும் முன்னோக்கிய பார்வையைக் கொண்ட நாணயக் கொள்கையினை நடத்துவதற்காக நெகிழ்ச்சித்தன்மை கொண்ட பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பொன்றினை நடைமுறைப்படுத்துவதனை நோக்கி செயற்பட்டு வருகின்றது. ஏற்றுமதிகளை ஊக்குவிக்கின்ற போட்டித்தன்மை வாய்ந்த மிக நெகிழ்ச்சித்தன்மை கொண்ட செலாவணி வீதக் கொள்கையையும் இது பின்பற்றி வருகின்றது. அரசாங்கமும் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினையும் படுகடன் மட்டங்களையும் படிப்படியாகக் குறைப்பதனை நோக்கமாகக் கொண்ட அரசிறையை அடிப்படையாகக் கொண்ட இறைத்திரட்சி நிகழ்ச்சித்திட்டத்தினைப் பின்பற்றுவதற்கான கடப்பாட்டினைக் கொண்டிருக்கிறது. சரியான இறைக் கொள்கையினையும் நாணயக் கொள்கையினையும் நாம் கொண்டிருப்போமாயின் செலாவணி வீதத்தின் மீதான அழுத்தம் குறைவடையும். இக்கட்டமைப்புக்கள் பற்றி விபரமான முறையில் நான் ஆராயப் போகிறேன்.

**நாணயக் கொள்கைக் கட்டமைப்புத்** தொடர்பாக, மத்திய வங்கி, வலுவானதொரு அடிப்படையில் தாழ்ந்த பணவீக்கச் சூழலினைப் பேணுவதற்காக நெகிழ்ச்சித்தன்மையுடைய பணவீக்க இலக்கிடல் அமைப்பினை அறிமுகப்படுத்துவதனை நோக்கிச் செயற்பட்டு வருகின்றது. நெகிழ்ச்சித்தன்மையுடைய பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பு என்பது தரவினால் தூண்டப்படும் முன்னோக்கிச் செல்கின்ற முன்கூட்டிய செயற்பாடு சார்ந்த நாணயக் கொள்கை அமைப்பாக இருப்பதுடன் இது மூன்று முக்கிய தூண்களான வலுவான இறைக் கொள்கை ஆதரவு, காத்திரமான நாணயக் கொள்கையை நடத்துதல் மற்றும் வலுவான மத்திய வங்கியின் பொறுப்பாண்மை மற்றும் நம்பகத்தன்மை ஆகியவற்றின் மீது கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது. அரசாங்கமும் அது அண்மையில் வெளியிடப்பட்ட தொலைநோக்கு 2025 கொள்கை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டவாறு நெகிழ்ச்சித்தன்மையுடைய பணவீக்க இலக்கிடல் அமைப்பினைப் பின்பற்றும் இந்நடவடிக்கையினை அங்கீகரித்திருக்கிறது. நெகிழ்ச்சித்தன்மையுடைய பணவீக்க இலக்கிடலை வெற்றிகரமாக நடைமுறைக்கிடும் பொருட்டு, அவசியமான சட்டவாக்கம், நிறுவன ரீதியான மற்றும் தொழிற்பாட்டு மாற்றங்கள் உட்பட, அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் பூர்த்தி செய்யப்பட வேண்டிய பல மைல்கற்களை மேலோட்டமாகக் குறிப்பிடுகின்ற வழிகாட்டலொன்றினை நாம் உருவாக்கியிருக்கின்றோம். பன்னாட்டு நாணய நிதியமும் இயலாற்றலைக் கட்டியெழுப்புகின்றமைக்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகளை எமக்கு வழங்கியதன் மூலம் நெகிழ்ச்சித்தன்மையுடைய பணவீக்க இலக்கிடலை நோக்கிய எமது நகர்வினை அங்கீகரித்திருக்கிறது.

செலாவணி வீதத்தினை நிர்ணயிப்பதற்கு சந்தை விசைகளை அனுமதித்தமையின் மூலம் மத்திய வங்கி 2017இல் **செலாவணி வீதத்தில் பெருமளவு நெகிழ்ச்சித்தன்மையினை** உள்ளடக்கியிருக்கிறது. உடன் சந்தை மீளெழுச்சியடைந்தமையின் மூலம் இக்கொள்கை முன்னெடுப்புக்களுக்குச் சந்தை சாதகமான முறையில் எதிர்வினையாற்றியிருக்கிறது. கடன்படாத வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளின் அளவினைக் கட்டியெழுப்புவதற்காக மாத்திரம் மத்திய வங்கி உள்நாட்டு வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியினை தொடர்ந்தும் ஈர்த்துக் கொண்டது. இந்நடவடிக்கையும் செலாவணி வீதத்தின் நடத்தையினை சுமூகப்படுத்துவதற்கு உதவியது. 2017இல் ரூபா உயர்வடைந்தமைக்கான சில நிகழ்வுகள் காணப்பட்டமை வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக்கு குறிப்பிடத்தக்களவு உட்பாய்ச்சல் ஏற்பட்டமையினை எடுத்துக்காட்டியது. இலங்கை 2017 திசெம்பரில் ப.நா. நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் நான்காவது தொகுதியைப் பெற்றுக்கொண்டது. இதுவரை பெற்றுக்கொண்ட தொகை மொத்தமாக ஐ.அ.டொலர் 759.9 மில்லியனாகக் காணப்பட்டது. இது குறித்துரைக்கப்பட்ட செயலாற்றப் பிரமாணம் மற்றும் குறிப்பிட்ட அமைப்பியல் அடிப்படை அளவுக் குறியீடு என்பனவற்றின் நியதிகளில் 2017ஆம் ஆண்டுப்பகுதியில் ப.நா.நிதியம் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி இலக்குகளை எய்துவதில் இலங்கையின் செயலாற்றத்தினை உறுதிப்படுத்தியது. முக்கிய ஏற்றுமதிச் சந்தைகளின் சிறந்த வாய்ப்புக்கள், செலாவணி வீத நெகிழ்ச்சித்தன்மையினைப் பேணுகின்ற மத்திய வங்கியின் கொள்கை, தூண்டுதலளிக்கும் வெளிநாட்டு வர்த்தகக் கொள்கைகள் மற்றும் நாட்டின் மேம்பட்ட பேரண்டப் பொருளாதார நிலைமைகள் என்பனவற்றின் காரணமாக ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தன. மேலும், ஐரோப்பிய ஒன்றியத்தின் பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைகளின் திட்டம் +

வசதி மீண்டும் கிடைத்தமை, சிங்கப்பூர், சீனா மற்றும் இந்தியாவுடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றமை. வலுவான நிறுவன ரீதியான மற்றும் கொள்கை ஆதரவு என்பனவும் ஏற்றுமதிகளின் உத்வேகத்தினைத் தூண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

2017இல் **வெளிநாட்டு நேரடி முதலீடுகளின்** அளவு அதிகரித்தமையினை நாம் அவதானித்திருப்பதுடன் அம்பாந்தோட்டைக் கைத்தொழில் வலயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை மற்றும் கொழும்பு துறைமுக நகரச் செயற்றிட்டம் தொடர்ந்து இடம்பெறுகின்றமை என்பனவற்றினூடாக வெளிநாட்டு நேரடி முதலீடுகள் அதன் உத்வேகத்தினை மீண்டும் அடைந்து கொள்ளுமென எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாண்டுப் பகுதியில் அரச பிணையங்கள் சந்தை மற்றும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை அதேபோன்று அரசாங்கத்திற்கான நீண்ட நிதியியல் பாய்ச்சல் என்பனவற்றிற்கான உட்பாய்ச்சல்களில் உயர்வு அவதானிக்கப்பட்டது. வெளிநாட்டுத் துறையில் காணப்பட்ட இவ்வபிவிருத்திகளின் காரணமாக மத்திய வங்கி வெளிநாட்டு ஒதுக்குகளை 2017 இறுதியில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 7.9 பில்லியனுக்குக் கட்டியெழுப்பக் கூடியதாக இருந்தது.

இறைப் பக்கத்தில், அரசாங்கம் நாட்டின் அரச நிதியினை வலுப்படுத்துவதற்காக அரசிறையினை அடிப்படையாகக் கொண்ட இறைத்திரட்சிப் பயணத்தினை ஆரம்பித்திருக்கிறது. வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை 2020 அளவில் மொ.உ.உற்பத்தியின் 3.5 சதவீதத்திற்குக் குறைப்பதற்கும் இதன் மூலம் அரச படுகடன் நடுத்தர காலத்தில் வலுவானதொரு மட்டத்திற்குக் குறைக்கப்படுமெனவும் அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. அரசின் அரசிறைச் சேகரிப்பினை மேம்படுத்துகின்ற நோக்குடன் பல சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தும் செயன்முறையில் அரசாங்கம் ஈடுபட்டிருக்கின்ற வேளையில், நடுத்தர காலத்தில் எதிர்பார்க்கப்பட்ட இறைத்திரட்சிப் பாதையினை தொடரும் விதத்தில் அரச செலவினம் சிக்கனப்படுத்தப்பட்டு வருகின்றது. சாதகமான ஆரம்ப நிலுவையொன்று 1950இன் தொடக்கப் பகுதிக்குப் பின்னர் 2017இல் முதற்றடவையாக எதிர்பார்க்கப்பட்டதுடன் நடைமுறைக் கணக்கில் மிகையொன்று 1987 இற்குப் பின்னர் முதற்றடவையாக 2018இல் எதிர்பார்க்கப்படுகிறது. அரசாங்கத்திற்கான வரவு செலவுத்திட்டத் தாக்கத்தினைத் தணிப்பதற்காக, அரசாங்கத்தின் சீர்திருத்த நிகழ்ச்சிநிரல் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் நிதியியல் ஆற்றலை மேம்படுத்துவதனை உள்ளடக்கியிருக்கிறது.

2017இல் நாணய மற்றும் செலாவணி வீதக் கொள்கைகளில் தெளிவான கட்டமைப்புக்களையும் சீர்திருத்தங்களையும் அறிமுகப்படுத்துகின்ற வேளையில், நிதியியல் துறையின் சவால்களைக் கட்டுப்படுத்துவதற்காகவும் காத்திரமான நாணயக் கொள்கை பரிமாற்றங்களுக்காகவும் நீடித்தநிலையான வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்காகவும் உறுதியான நிதியியல் முறைமையினைப் பேணுவதற்காக 2017ஆம் ஆண்டுப்பகுதியில் நாம் பல கொள்கை வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியிருக்கிறோம். **இயக்கவாற்றல்மிக்கதும் தாக்குப்பிடிக்கக் கூடியதுமான நிதியியல் துறையினை** ஊக்குவிக்கும் நோக்குடன், மத்திய வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பானது பன்னாட்டு நியமங்களுக்கும் சிறந்த நடைமுறைகளுக்கும் இசைந்த விதத்தில் மேலும் வலுப்படுத்தப்பட்டிருக்கிறது. தற்பொழுது, எமது வங்கித்தொழில் துறை

ரூ.10 றில்லியனுக்கு மேற்பட்ட சொத்துக்களுக்கு வகைகூறிய வேளையில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் துறை ரூ.1 றில்லியனுக்கு மேற்பட்ட சொத்துக்களுக்கு வகைகூறியது. கூடியளவிற்கு உத்வேகம் மிக்க வங்கித்தொழில் துறையினை அபிவிருத்தி செய்யும் பொருட்டு பாசல் III மூலதன நியமங்களின் நடைமுறைப்படுத்தல் 2017இல் தொடங்கியது. சவால்களை எதிர்கொள்ளும் நிலைமைகளின் கீழ் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான கட்டமைப்பு வலுப்படுத்தப்பட்டதுடன் இடர்ப்பாட்டிலுள்ள நிதிக் கம்பனிகள் பற்றிய தீர்மானங்களை மேற்கொள்கின்ற நடவடிக்கைகள் ஆரம்பமாகின. 2017ஆம் ஆண்டுப்பகுதியில் மத்திய வங்கி நுண்பாக நிதித் துறைக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினையும் தொடர்ந்தும் பலப்படுத்தியதுடன் ஏனைய அரச முகவர்களின் உதவியுடன் சட்டத்திற்கு மாறான பிரமிட் திட்டங்களின் அபாயத்தினைத் தொடர்ந்தும் ஒழிப்பதற்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டது. நாட்டில் வினைத்திறன் மிக்கதும் உறுதியானதுமான கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையையும் அதேபோன்று டிஜிட்டல் பொருளாதாரத்தினை நோக்கிய வழியொன்றினையும் அபிவிருத்தி செய்யும் பொருட்டு கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு உட்கட்டமைப்பினை வலுப்படுத்தவும் நவீனமயப்படுத்துவதற்குமாக பல வழிமுறைகள் பின்பற்றப்பட்டன.

நம்பிக்கைக்குரிய, தொழில்சார் தகைமை கொண்டதும் வலுவானதுமான நிறுவனமுமாக இருந்து வருகின்ற மத்திய வங்கியிடம் முக்கியமான **முகவர் பணிகள்** ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. இதன்படி எமது பொறுப்பாணைக்கிணங்க, சாத்தியமானளவிற்கு குறைந்த செலவில் அரசாங்கத்தின் நிதியிடல் தேவைப்பாடுகளைத் திரட்டுகின்ற குறிக்கோளுடனும் இடர்நேர்வின் முன்மதியுடைய அளவுடனும் நாம் பொதுப்படுகடன் முகாமைத்துவத்தினை மேற்கொண்டு வருகின்றோம். அரச பிணையங்களை வழங்குவதற்கு வெளிப்படையான சந்தையை அடிப்படையாகக் கொண்ட ஏல பொறிமுறையினை அறிமுகப்படுத்தியதன் மூலம் அரச படுகடன் முகாமைத்துவத்திற்கான கட்டமைப்பு வலுப்படுத்தப்பட்டது. இது ஏற்கனவே, அரசாங்கத்திற்கான வட்டிச் செலவினைக் குறைத்தமை, காத்திரமான விலை கண்டறிதல் மற்றும் அடிப்படைய அளவுக் குறியீட்டு விளைவு வளையி முழுவதிலும் நாணயக் கொள்கை பரிமாற்றத்திற்கான சமிக்ஞைகளை மேம்படுத்தியமை என்பன மூலம் விரும்பத்தக்கப் பெறுபேறுகளை ஏற்படுத்தியிருக்கின்றது. மத்திய வங்கியினால் முகாமைப்படுத்தப்பட்டு வரும் நாட்டின் மிகப் பெரிய ஓய்வூதிய நிதியமான ஊழியர் சேம நிதியம் 2017ஆம் ஆண்டுப்பகுதியில் குறிப்பிடத்தக்க மைல்கற்களைக் கடந்ததுடன் நிதியத்தின் மொத்தச் சொத்துக்கள் ரூ.2.0 றில்லியனையும் விஞ்சிக் காணப்பட்டன. மத்திய வங்கி நிதியியல் தொடர்பான அறிவையும் குறைந்த செலவில் நிதியியல் வசதிகளை வழங்கும் தன்மைகளையும் தொடர்ந்தும் மேம்படுத்தியதுடன் வேளாண்மை மற்றும் விலங்குவளர்ப்பு, நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் துறைகள் என்பனவற்றிற்கான எமது கொடுகடன் திட்டங்களூடாக தொழில்முயற்சியாண்மைகளின் அபிவிருத்திக்கு உதவியளித்தது. மேலும், மத்திய வங்கி தூய தாள் நாணயக் கொள்கையினை மேம்படுத்துவதற்கு பல வழிமுறைகளை மேற்கொண்டதுடன் நாணயத் தொழிற்பாடுகளிலும் செயன்முறைப்படுத்தலிலும் பல முன்னேற்றங்களும் அடையப்பட்டன. 2017இல் மத்திய வங்கி 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் அடிப்படையில் வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகளுக்காக புதிய சட்டவாக்க மற்றும் கொள்கைக் கட்டமைப்பினை நடைமுறைப்படுத்தியது. கட்டுப்பாடுகளைக் குறைத்தல், தெளிவற்ற

மயக்கம் தரும் கருத்துக்களை நீக்குதல், செயன்முறைப்படுத்தலை இலகுபடுத்தல் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கலுடன் இணைந்த வினைத்திறனை மேம்படுத்தல் என்பனவற்றின் மீது கவனம் செலுத்துகின்ற வேளையில் தெளிவான தன்மையினையும் வசதிகளையும் உறுதிப்படுத்துகின்ற விதத்தில் மத்திய வங்கியில் புதிதாக உருவாக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தினூடாக புதிய சட்டத்தின் ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் தொடர்பான ஒழுங்குவிதிகளை நிறைவேற்றுவதில் இலங்கைக்கான உலகளாவிய தரப்படுத்தலினை மேம்படுத்துவதற்கான கணிசமானளவு வேலை தேவைப்படுகின்றது. சவால் நிறைந்த சூழ்நிலைகளின் கீழ், இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் உளவறிதல் பிரிவு முக்கியமான அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் அதேபோன்று உரிமம் பெற்ற வங்கிகள், உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள், ஒழுங்குமுறைப்படுத்துநர்கள், பங்குத்தரகர்கள் மற்றும் காப்புறுதிக் கம்பனிகள் போன்ற ஆர்வலர்களினதும் உதவியுடன் இதனைத் தீர்ப்பதற்கான பல வழிமுறைகளை மேற்கொண்டதுடன் மற்றைய நாடுகளின் நிதியியல் உளவறிதல் பிரிவுகளுடன் புதிய புரிந்துணர்வு ஒப்பந்தங்களைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது.

நாட்டின் பொருளாதார உறுதிப்பாட்டை அதிகரிப்பதற்கு மத்திய வங்கி ஏற்கனவே பல வழிமுறைகளை ஆரம்பித்திருப்பதுடன் இம்முயற்சியானது எதிர்காலத்திலும் தொடரும். மேம்பட்ட பொருளாதார அடிப்படைகளையும் உறுதிப்பாட்டையும் கவனத்தில் கொள்கையில், தற்போதைய குறைந்த வளர்ச்சி வேகத்திலிருந்தும் அதன் உள்ளார்ந்த வளத்தை அடையும் விதத்தில் **பொருளாதாரத்தை உயர்த்துவதற்குத் தேவையான கொள்கை சீர்திருத்தங்களை** அரசாங்கம் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்த்திருக்கிறது. அரசாங்கத்தின் தொலைநோக்கு 2025 நாட்டின் எதிர்கால கொள்கை நெறிப்படுத்தலை வெளிப்படுத்தியது. தொலைநோக்கானது அறிவினை அடிப்படையாகக் கொண்ட, உயர்ந்த போட்டித்தன்மை வாய்ந்த சமூக - சந்தைப் பொருளாதாரத்துடன் கூடிய இந்துமா சமுத்திரத்தின் மையமொன்றாக இலங்கையை மாற்றியமைப்பதன் மூலம் மேற்கொள்ள எதிர்பார்க்கிறது. இதற்கமைய, உள்நாட்டுச் சந்தையின் மட்டுப்படுத்தப்பட்ட செயற்பரப்பினை பரிசீலனையில் கொள்கையில் வலுவான எதிர்காலப் பொருளாதார வளர்ச்சியினை வெளிநாட்டுக் கேள்வியிலிருந்தே உருவாக்க வேண்டியிருக்கும். எனவே, வர்த்தகம் மற்றும் முதலீடுகளை பயன்படுத்திக் கொள்வதனூடாக வெளிநாட்டு உட்பாய்ச்சலை மேம்படுத்துவதற்கு காத்திரமானதும் நீடித்துநிலைத்திருக்கக் கூடியதுமான நீண்ட காலக் கொள்கை வழிமுறைகளை நடைமுறைப்படுத்த வேண்டியிருக்கும்.

அடிக்கடி நிகழும் **இயற்கை அனர்த்தங்கள்** பொருளாதார நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டையாக விளங்கி மிதமான பொருளாதார விரிவாக்கத்தினைத் தோற்றுவிக்கின்றமையை நாம் அவதானித்துள்ளோம். இது பொருளாதாரத்திலுள்ள வளர்ச்சியைத் தூண்டும் விடயங்கள் பன்முகப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் அதேபோன்று திட்டமிடுதல் மற்றும் வரவு செலவுத்திட்டமிடும் செயன்முறைகளுக்கு நிலைத்திருக்கும் தன்மையினை ஏற்படுத்துவதனூடாகவும்

அனர்த்தத்திற்கு ஆயத்தமாக இருக்கும் தன்மையினை மேம்படுத்துவதன் மூலமும் தாக்குப்பிடிக்கக்கூடிய வலுவான பொருளாதாரத்திற்கு அவசியமான வழிமுறைகளை நடைமுறைப்படுத்த வேண்டியதனையும் எடுத்துக்காட்டுகிறது.

உலகளாவிய பின்னணியில், உலகளாவிய நிதியியல் நெருக்கடியின் பின்னர் தொடர்ச்சியான பொருளாதாரப் பிறழ்வுகளையும் எதிர்மறையான அதிர்வுகளையும் சந்தித்த பின்னர் தற்பொழுது **உலகப் பொருளாதாரம்** படிப்படியாக மீட்சியடைந்து வருகிறது. முதலீட்டு நிலைமைகள் மேம்பட்டு இருப்பதுடன் உலகளாவிய வர்த்தகமும் 2017இல் மீள வலுப்பெற்றிருக்கிறது. உலகளாவிய நிதியியல் நெருக்கடிக்குப் பின்னர், முதற்றடவையாக ஐரோப்பா, யப்பான் மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் ஏக காலத்தில் நிகழ்ந்த பொருளாதாரத்தின் விரிவாக்கத்தின் உதவியுடன் ஏற்பட்ட உலகளாவிய வளர்ச்சியின் மீளெழுச்சியின் மூலம் உருவாக்கப்பட்ட வாய்ப்புக்களை நாம் பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். எமது இரு பெரும் சந்தைகளான ஐரோப்பாவிலும் ஐக்கிய அமெரிக்காவிலும் காணப்பட்ட வாய்ப்புக்கள் எமக்கு அதிக சந்தர்ப்பங்களைக் கொண்டுள்ளது எனத் தெளிவாகின்றது. இவ்வளர்ச்சி இலங்கைக்குச் சாதகமானதாகும். எனினும், முன்னேற்றம் கண்ட நாடுகளின் நாணயக் கொள்கைகள் படிப்படியாக வழமைக்குத் திரும்புவது வெளிநாட்டு மற்றும் இறைத் துறை இரண்டின் மீதும் பொருளாதாரத்திற்கு அச்சுறுத்தலைத் தோற்றுவிக்கக்கூடுமென்பதனை நாம் மனதில் கொள்ள வேண்டும்.

இலங்கை உயர் நடுத்தர வருமான பொருளாதார அந்தஸ்திற்குப் படிப்படியாக மாற்றமடைந்து வருகின்றது. வலுவான முன்னேற்றத்திற்கு உலகளாவிய பொருளாதாரத்துடன் பெருமளவிற்கு ஒருங்கிணைக்கப்படுவது தவிர்க்க முடியாததாக இருக்கும். வாய்ப்புக்களை உருவாக்குகின்ற வேளையில் இது பொருளாதாரத்தினைப் பெருமளவு நிச்சயமற்றதன்மைக்கும் இடர்நேர்வுகளுக்கும் உட்படுத்தும். தற்போதைய மற்றும் எதிர்காலச் சவால்களை முன்கூட்டிய செயற்பாடு சார்ந்த விதத்தில் எதிர்நோக்கவும் ஏற்கனவேயுள்ள செயன்முறையின் போது அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளைக் கட்டுப்படுத்தவும், மத்திய வங்கி அதன் நடுத்தர கால உபாயத் திட்டமிடலில் எடுத்துக்காட்டியவாறு அதன் நிறுவன ரீதியான கட்டமைப்பினை (அ) நாணயக் கொள்கைக் கட்டமைப்பினை உயர்த்துதல் (ஆ) நிதியியல் துறை மேற்பார்வையினை வலுப்படுத்தல் (இ) கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகளை நவீனமயப்படுத்தல்; மற்றும் (ஈ) பொதுப்படுகடன் முகாமைத்துவத்தினைத் தரமுயர்த்தல் என்பன மூலம் உத்வேகமான முறையில் வலுப்படுத்த எதிர்பார்க்கிறது.

**மேம்பட்ட கொள்கைக் கட்டமைப்பானது** பெருமளவு ஒருங்கிணைப்பினைக் கொண்ட அநுகூலங்களை நாடு பெற்றுக்கொள்ள இயலுமைப்படுத்துகின்ற வேளையில், தொடர்புடைய இடர்நேர்வுகளைத் தணித்துப் பொருளாதாரத்தின் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையினை அதிகரிக்கின்றது. இது தொடர்பில், ஏற்கனவே குறிப்பிடப்பட்டவாறு, விலை உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காகக் காத்திரமான நெகிழ்ச்சித்தன்மையுடைய பணவீக்க இலக்கிடலை நோக்கி நாம் உறுதியாக முன்னேறி வருகின்றோம். அதேநேரம் நிதியியல் முறைமையில் பாதிக்கப்படும் தன்மையினைக் குறைக்கும் பொருட்டு இயக்கவியல் சார்ந்ததும் தாக்குப்பிடிக்கக்கூடியதுமான

நிதியியல் துறையினை மேம்படுத்த அயராது பாடுபடுகின்றோம். வளர்ச்சி, தொழில் வாய்ப்பு மற்றும் வருமானம் தொடர்பான குறிக்கோள்களை எய்துவதற்கு இவை முன்னுரிமை வாய்ந்தவையாகும். காசல்லாத சமூகத்தினை நோக்கி வழியமைப்பதற்கு கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் உட்கட்டமைப்பினை நவீனமயப்படுத்தல் மற்றும் டிஜிட்டல் பொருளாதாரத்திற்கு வசதியளித்தல் என்பன நடுத்தர காலத்தில் முக்கியமான முன்னுரிமை வாய்ந்த கொள்கைகளாகக் காணப்படுகின்றன. படுகடன் உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்தல், முதலாந்தர ஏல முறைமையின் காத்திரமான தன்மையினையும் வெளிப்படையான தன்மையினையும் உயர்த்துதல், சந்தை அபிவிருத்தியினை மேம்படுத்தல் மற்றும் இடர்நேர்வினைக் குறைத்தல் ஆகியவற்றின் நோக்கில் முன்மதியுடைய படுகடன் முகாமைத்துவத்திற்காக கடுமையாக உழைக்க நாம் தீர்மானித்திருக்கிறோம். நாட்டின் பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடு மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு என்பனவற்றிற்கு ஆதரவளிக்கின்ற கருவிகளாக விளங்கக்கூடிய இவ்வுபாய முன்னுரிமைகளுடன் எமது கொள்கைகள் இணைக்கப்படும். இப்பின்னணியில் வழிகாட்டல் 2018, 2017ஆம் ஆண்டுப்பகுதியில் பின்பற்றப்பட்ட கொள்கை நடவடிக்கைகளை மீளாய்வு செய்வதுடன், மிக முக்கியமாக இனிவரும் காலப்பகுதிக்கான கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் முன்மொழிகிறது.

இதன்படி வழிகாட்டல் 2018இன் மேலோட்டமான தன்மைகள் பின்வருமாறு:

பிரிவு 2: 2018இற்கும் அதற்கு அப்பாலுக்குமான மத்திய வங்கியின் நாணயக் கொள்கை உபாயம் மற்றும் கொள்கைகள்

பிரிவு 3: 2018இற்கும் அதற்கு அப்பாலுக்குமான நிதியியல் துறைச் செயலாற்றம் மற்றும் உறுதிப்பாட்டுடன் தொடர்பான மத்திய வங்கியின் கொள்கைகள்

பிரிவு 4: மத்திய வங்கியின் முகவர் மற்றும் துணைத் தொழிற்பாடுகளினூடாக பரந்த பொருளாதாரத்தினை வலுப்படுத்துவதுடன் தொடர்பான முக்கிய கொள்கைகள்

இப்பொழுது நான் இப்பிரிவுகளை விபரமான விதத்தில் விளக்க முற்படுகிறேன்.

## 2. 2018 இற்கும் அதற்கு அப்பாலுக்குமான நாணயக் கொள்கை உபாயமும் கொள்கைகளும்

நாட்டின் விலை உறுதிப்பாட்டினைப் பேணுகின்ற பணி மத்திய வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. விலை உறுதிப்பாடு, நீடித்துநிலைத்திருக்கும் வளர்ச்சியைத் தூண்டுவதற்கும் மக்களின் வாழக்கைத் தரத்தினைப் பாதுகாத்துக் கொள்வதற்குமான சூழ்நிலையொன்றினைப் பேணி வளர்க்கின்ற முக்கிய அடிப்படையொன்றாக விளங்குகிறது.

மத்திய வங்கி அதன் விலை உறுதிப்பாட்டுக் குறிக்கோளை நாணயக் கொள்கையை மேற்கொள்வதனூடாக எய்த எதிர்பார்க்கிறது. தற்போதைய நாணயக் கொள்கைக் கட்டமைப்பின் அடிப்படையில் ஏறத்தாழ ஒரு தசாப்த காலப்பகுதிக்கு ஒற்றை இலக்கத்தில் பணவீக்கத்தினைப் பேணக்கூடியவர்களாக இருந்து வருகிறோம்.

முன்னோக்கிப் பார்க்கையில் காத்திரமான நெகிழ்ச்சித்தன்மை பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பினை அறிமுகப்படுத்துவது விலை உறுதிப்பாட்டினை வழங்குவதற்கான எமது இயலாற்றலை மேம்படுத்தும். இது வளர்ச்சி மற்றும் தொழில்நிலை உருவாக்கத்திற்கான மிக அநுகூலமான சூழலை வழங்கும்.

தற்பொழுது உயர்ந்த பணவீக்கம் - தாழ்ந்த வளர்ச்சிப் பொறியிலிருந்து நாம் வெளியேறுவதற்கு மிகப் பொருத்தமான வழியாக இதனை நாம் இனங்கண்டதன் மூலம் பல ஆண்டுகளுக்கு முன்பே பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பு தொடர்பான எமது நாட்டம் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. இந்நகர்வினை ஊக்குவித்த முக்கிய காரணிகளில் பணம் மற்றும் பணவீக்கம் என்பனவற்றிற்கிடையிலான பலயீனமான தொடர்பு, நிதியியல் சந்தைகளின் ஆழமடைதல் என்பன உள்ளடங்கும்.

முன்மொழியப்பட்ட நெகிழ்ச்சித்தன்மையுடைய பணவீக்கக் கட்டமைப்பின் கீழ் மத்திய வங்கி 4–6 சதவீத வீச்சினைக் கொண்ட பணவீக்கத்தை இலக்கிட்டு பொருளாதாரத்தின் விலை உறுதிப்பாட்டினைப் பேண எய்துகிறது. வழங்கல் அல்லது வெளிநாட்டு அதிர்வுகளிற்கு எமது பொருளாதாரத்தின் எய்துநிலையைக் கருத்திற் கொண்டு இவ்விலக்கானது பொருத்தமானது என நாம் நம்புகிறோம். சந்தை நிலைமைகளில் செல்வாக்குச் செலுத்துவதற்காகவும் பணவீக்கத்தினை இலக்கிடப்பட்ட நடு ஒற்றை இலக்க வீச்சில் வழிப்படுத்துவதற்காகவும் நாம் சந்தையை அடிப்படையாகக் கொண்ட கருவிகளைக் குறிப்பாக மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதங்களையும் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளையும் பயன்படுத்துவோம். ஒட்டுமொத்த நாணய விரிவாக்கம் மற்றும் வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்படும் கொடுகடன்கள் போன்ற மாறிகள் நாணயக் கொள்கையின் நடத்தையை வழிநடத்துவதற்கான முக்கிய குறியீட்டு மாறிகளாகத் தொடர்ந்து காணப்படும்.

நெகிழ்ச்சித்தன்மையுடைய பணவீக்க இலக்கிடலை நோக்கிய இந்த முன்னேற்றத்தை யதார்த்தமாக்குவதற்காக இப்பொழுது நாங்கள் காலத்தினால் நிர்ணயிக்கப்பட்ட திட்டமொன்றிற்கு முன்னேறியுள்ளோம். நெகிழ்ச்சித்தன்மையுடைய பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பினை நோக்கி நிலை மாறுவதற்கு சுமூகமாக வசதியளிப்பதற்குத் தேவையான சீர்திருத்தங்களை இடுகின்ற முக்கிய காலப்பகுதியாக 2018 இலிருந்து ஆரம்பமாகும் காலப்பகுதி விளங்கும்.

இப்பின்னணியில், நெகிழ்ச்சித்தன்மையுடைய பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பினைப் பின்பற்றுவதற்கான மூன்று முக்கிய தூண்களை நாம் அடையாளம் கண்டுள்ளோம்.

1. வலுவான மத்திய வங்கி பொறுப்பாணை மற்றும் நம்பகத்தன்மை
2. காத்திரமான நாணயக் கொள்கை மேற்கொள்ள
3. வலுவான இறைக் கொள்கை ஆதரவு மற்றும் கடப்பாடு

இப்பொழுது நான் நெகிழ்ச்சித்தன்மையுடைய பணவீக்க இலக்கிடலின் சில முக்கிய அம்சங்கள் மற்றும் அடிப்படைக் கூற்றுக்கள் பற்றியும் ஆராயவுள்ளேன்.

நெகிழ்ச்சித்தன்மையுடைய பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பினை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு வலுவான **மத்திய வங்கி பொறுப்பாணையும் நம்பகத்தன்மையும்** மிக இன்றியமையாதனவாகும். பலயீனமான சட்ட பொறுப்பாணைகள் மற்றும் போதுமானதற்ற சுயநிர்ணயம் மத்திய வங்கிகளின் என்பன நெகிழ்ச்சித்தன்மையுடைய பணவீக்க இலக்கிடலின் பாதிக்கின்றமையினை உலகம் முழுவதும் காணமுடிகிறது. இப்பின்னணியில், இலங்கை தேவையான சட்ட சீர்திருத்தங்களினூடாக மத்திய வங்கியின் தற்போதுள்ள பொறுப்பாணைகளுக்குக் கணிசமான மாற்றங்களை அறிமுகப்படுத்த வேண்டியிருக்கும். தற்போதைய கட்டமைப்பு மையமல்லாத நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவது, நாணய நிதியிடல் மற்றும் போதுமானதற்ற சுயநிர்ணயம் என்பனவற்றினால் பாதிக்கப்படுகிறது. இக்காரணிகள் நெகிழ்ச்சித்தன்மையுடைய பணவீக்க இலக்கிடலை நோக்கிய நிலைமாற்றுப் பயணத்தில் அமைப்பியல் தடைகளாகக் காணப்படுகின்றன. ஆகவே, பொறுப்பாணை மீதான கவனத்தினை அதிகரிக்கவும் அதேபோன்று மத்திய வங்கியின் சுயநிர்ணயம், ஆளுகை, வெளிப்படையானதன்மை மற்றும் பொறுப்புக்கூறும் தன்மை என்பனவற்றை உயர்த்தி நாணய விதிச் சட்டத்தினைத் திருத்துவது தவிர்க்க முடியாததாகும். இத்திருத்தங்கள், விலை உறுதிப்பாட்டின் பொறுப்பாணையினை வலுப்படுத்தல், நாணய மற்றும் இறைத் தொழிற்பாடுகளை வேறாக்குதல், மத்திய வங்கியின் சுயநிர்ணயத்தினை வலுப்படுத்தல், பணவீக்க இலக்கிடலை நிர்ணயிப்பதற்காக நிறுவன ரீதியான ஒழுங்குகளை அறிமுகப்படுத்தல் மற்றும் பொறுப்புக்கூறும் தன்மையினைப் பேணுதல் என்பனவற்றைப் பரந்தளவில் உள்ளடக்குகிறது.

இரண்டாவதாக, நெகிழ்ச்சித்தன்மையுடைய பணவீக்க இலக்கிடலின் கீழ், தாழ்ந்த பணவீக்கத்தினைப் பேணுவதற்கு, இன்றியமையாத கூறாகக் **காத்திரமான நாணயக் கொள்கை நடத்தையினை** உறுதிப்படுத்துவதற்கு, நம்பகமான பேரண்டப் பொருளாதார எதிர்வுகூறல் மற்றும் எறிவுகளின்

அடிப்படையில் ஆற்றல்வாய்ந்த தீர்மானங்களை மேற்கொள்கின்ற நடவடிக்கை உபாயமும் முன்னோக்கிய நாணயக் கொள்கை நடவடிக்கையும் எமக்கு அவசியமாகவுள்ளன. இது தொடர்பில் இலங்கை மத்திய வங்கி முக்கிய பேரண்டப் பொருளாதார மாறிகளை மாதிரிப்படுத்தல் மற்றம் எதிர்வுகூறல் தொடர்பான தொழில்நுட்ப இயலாற்றலை ஏற்கனவே மேம்படுத்தியுள்ளது. மத்திய வங்கியும் ப.நா.நிதியமும் ஒன்றிணைந்து அமைப்பியல் மாதிரியினை அடிப்படையாகக் கொண்ட எதிர்வுகூறல் மற்றும் கொள்கைப் பகுப்பாய்வினை அபிவிருத்தி செய்துள்ளன. இது கிட்டிய காலம் மற்றும் நடுத்தர கால மாதிரிகளை அடிப்படையாகக் கொண்ட எறிவுகளை உள்ளடக்கியிருந்தது. தற்போதைய கொள்கை வடிவமைப்புச் செயன்முறையானது எதிர்வுகூறல் மற்றும் கொள்கைப் பகுப்பாய்வு முறைமையினை அடிப்படையாகக் கொண்ட பகுப்பாய்வுடன் படிப்படியாக இணைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஏற்பாடானது, கூடியளவிற்கு முன்கூட்டிய செயற்பாடு சார்ந்ததும் முன்னோக்கிய தன்மையினைக் கொண்டதுமான விதத்தில் நாணயக் கொள்கை வடிவமைப்புச் செயன்முறைக்கு ஆதரவளிக்கின்றது. மத்திய வங்கி பணவீக்க எதிர்வுகூறல் மற்றும் பேரண்டப் பொருளாதார ஆய்வுகளுக்காக ஆற்றல்வாய்ந்த தொழில்நுட்ப உட்கட்டமைப்பினைக் கட்டியெழுப்புவதனூடாக மாதிரியினை அடிப்படையாகக் கொண்ட எறிவுகளைத் தொடர்ச்சியாக அபிவிருத்தி செய்யும்.

மேலும், முக்கியமான பொருளாதாரத் தரவு மற்றும் சம்பவங்களின் கிடைப்பனவினைப் பொறுத்து எறிவுகள் மற்றும் எதிர்வுகூறல்களின் திருத்தங்கள் என்பனவற்றிற்கான அட்டவணைகளை மேலோட்டமாகக் குறிப்பிடுகின்ற எதிர்வுகூறல் கலண்டர் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் நாணயக் கொள்கை வடிவமைப்புச் செய்முறை தரமுயர்த்தப்பட்டிருக்கிறது. எதிர்வுகூறலுக்கான உள்ளீடுகளைப் பெற்றுக்கொள்வதற்காகவும் எதிர்வுகூறலுக்கான பின்னூட்டல்களைப் பெற்றுக்கொள்வதற்காகவும் இரண்டு அலுவலர் மட்டக் கூட்டங்கள் ஒவ்வொரு நாணயக் கொள்கை சுழற்சியிலும் நடாத்தப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து எறிவுகள் மற்றும் துறை வாரியான அபிவிருத்திகள் பற்றி கலந்துரையாடுவதற்காக நாணயக் கொள்கைக் குழு அலுவலர்களும் தொழில்நுட்ப அலுவலர்களும் கலந்து கொள்கின்ற நாணயக் கொள்கைக் குழுவிற்கு முன்னரான கூட்டம் நடாத்தப்படுகின்றது. அதனைத் தொடர்ந்து நாணயச் சபைக்கு விதந்துரைப்புக்களைச் செய்வதற்காக முறைசார்ந்த நாணயக் கொள்கைக் குழுவின் கூட்டங்கள் இடம்பெறும். இவ்வாண்டுப்பகுதியில் நுணுக்கமான பேரண்டப் பொருளாதார பகுப்பாய்வுகளை மேற்கொள்வதற்கு தொழில்நுட்ப அலுவலர்களுக்குப் போதுமான நேரத்தினை அனுமதிப்பதற்காக நாணயக் கொள்கைக் கூட்டங்களின் எண்ணிக்கை 8 இற்குக் குறைக்கப்பட்டது.

புதிய முன்னோக்கிய பார்வை கொண்ட கட்டமைப்பில் தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்பட்ட எதிர்காலப் பொருளாதார நிலைமைகளின் அபிவிருத்திகளை கண்காணிப்பது மிக முக்கியமானதாக இருக்கின்றது. இது தொடர்பில் எதிர்வுகூறலின் துல்லியமானதன்மையை மேம்படுத்துவதற்காக முன்னோக்கிய பார்வையின் நுணுக்கமான விடயங்களைப் பெற்றுக்கொள்வதற்காக எதிர்பார்ப்புக்கள் மற்றும் பொருளாதார நிலைமைகளின் தற்போதைய அளவீடுகளை நாம் வலுப்படுத்துவோம்.

நாணயத் தொழிற்பாடுகளைப் பொறுத்தவரையில், மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நிலையுடன் இசைந்து செல்லும் விதத்தில், சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதத்தினை வழிப்படுத்துவதற்காக, உள்நாட்டு நாணயச் சந்தை திறந்த சந்தைத் தொழிற்பாடுகளினூடாகத் தீவிரமாக முகாமைப்படுத்தப்பட்டு வருகின்றது. பணச் சந்தையில் விலைகளை கண்டறிவதனை ஊக்குவிக்கும் நோக்குடனும் சந்தைப் பங்கேற்பாளர்கள் தகவல்களை அடிப்படையாகக் கொண்ட தீர்மானங்களை மேற்கொள்வதனை ஊக்குவிப்பதற்காகவும் அதேபோன்று திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் சந்தை சமிக்ஞைகளை மேம்படுத்துவதற்காகவும் 2017 தொடக்கம் திறந்த சந்தை ஏலங்களின் வெட்டு, விளைவு வீதங்கள், ஓரிரவு திரவத்தன்மை மதிப்பீடுகள் என்பன உள்ளிட்ட கூடுதலான தகவல்களைத் தொடர்புறுத்துவதற்காக நாம் பல முன்னேற்றகரமான வழிமுறைகளை எடுத்திருக்கிறோம். திரவத்தன்மை முகாமைத்துவத்தில் மத்திய வங்கி தொடர்ந்தும் தீவிரமாக ஈடுபடவிருக்கின்ற வேளையில் குறுங்கால வட்டி வீதங்களை விரும்பத்தக்கப் பாதையில் வழிப்படுத்தப்படும். பணச் சந்தைத் தொழிற்பாடுகளின் வினைத்திறனையும் இணங்குவிப்புக்களையும் மேம்படுத்துவதற்காக அடிப்படை வட்டி வீதங்களை மீளாய்வு செய்தல், ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதி தொடர்பான தொழிற்பாட்டுக் கட்டமைப்புக்களை மீளாய்வு செய்தல் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகர்களுக்கான ஒழுக்கக்கோவையினை அடிப்படையாகக் கொண்ட விதிகளை அறிமுகப்படுத்துதல் போன்ற பல வழிமுறைகள் நடைமுறைக்கிடப்படும்.

கடந்த ஆண்டில் அறிவிக்கப்பட்டவாறு, நாணயக் கொள்கையை நடத்துவதற்கு வெளிநிபுணர்களின் உதவியைப் கொள்ளும் பொருட்டு 2017இன் நடுப்பகுதியில் நாணயக் கொள்கை ஆலோசனைக்குழு மீள உருவாக்கப்பட்டது. நாங்கள் ஆர்வலர்களின் கருத்துக்களை சபைக்கு எடுத்துக் கொள்வதுடன் ஆர்வலர்களுக்கும் மத்திய வங்கிக்கும் பரஸ்பர நன்மைகளை அளிக்கின்ற விதத்தில் எமது கொள்கைகளை அணிப்படுத்துவோம்.

நாணயக் கொள்கையினை மேற்கொள்வது காத்திரமானதும் முன்மதியுடையதுமான **செலாவணி வீதக் கொள்கையில்** தங்கியிருப்பதனால், கூடியளவிற்கு சந்தையை அடிப்படையாகக் கொண்ட செலாவணி வீத முறைமையினை மத்திய வங்கி அறிமுகப்படுத்தியிருக்கிறது. சந்தை நிலைமைகளின் அடிப்படையில் செலாவணி வீதத்தினை நிர்ணயிப்பதற்கு மத்திய வங்கி கூடுதலான நெகிழ்ச்சித்தன்மையை அனுமதித்திருப்பதுடன் செலாவணி வீத நடத்தையை சுமூகப்படுத்துவதற்காகவும் ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்காகவும் மாத்திரமே செலாவணிச் சந்தையில் தலையிடுகிறது. இதன் விளைவாக செலாவணி வீதத்தின் மீது ஒரு சிறியளவு தாக்கத்துடன் மாத்திரம் 2017ஆம் ஆண்டுப்பகுதியில் படுகடனை உருவாக்காத பன்னாட்டு ஒதுக்குகள் கட்டியெழுப்பப்பட்டிருக்கின்றன என்பதனைக் கவனிப்பது முக்கியமானதாகும். முன்னோக்கிப் பார்க்கையில், நெகிழ்ச்சித்தன்மை கொண்ட செலாவணி வீத அமைப்புடன் ஒத்துச்செல்லும் விதத்திலும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைத் தொழிற்பாடுகளை மேம்படுத்துவதற்காகவும் வெளிநாட்டுச் செலாவணி தலையிட்டு கொள்கைகளைப் பின்பற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. போட்டித்தன்மை கொண்ட செலாவணி வீதத்தினை பேணிக் கொள்வது மத்திய வங்கியின் முக்கிய குறிக்கோளாகும்.

இக்கொள்கையுடன் இசைந்து செல்லும் விதத்தில் ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதில் **படுகடனை உருவாக்காத நிதியியல் உட்பாய்ச்சல்களின்** மீது நாம் தொடர்ந்தும் கவனத்தைச் செலுத்துவோம். அரசாங்கத்தின் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கொள்கைத் திருத்தங்கள் ஏற்றுமதிகளை ஊக்குவித்தல் அதேபோன்று வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவருதல் என்பனவற்றின் மீது கவனத்தினைச் செலுத்துகின்றது. இது, போட்டித்தன்மையினை உத்வேகப்படுத்துவதற்கு செலாவணி வீதத்தில் நெகிழ்ச்சித்தன்மையினைப் பேணுவதற்கான எமது நிகழ்ச்சிநிரல் பற்றிய பெருமளவு அடிப்படையை வழங்குகின்றது. முதலீட்டுச் சபை 2017இல் வெளிநாட்டு நேரடி முதலீடுகள், ஐ.அ.டொலர் 1.5 பில்லியனை அடையுமென மதிப்பிட்டிருக்கிறது. இது மிக முக்கிய மைல்கல்லாக இருக்குமென்பதுடன் வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்களில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தும் சாத்தியங்களையும் எடுத்துக்காட்டும். அம்பாந்தோட்டை கைத்தொழில் வலயம் ஆரம்பக்கப்படுகின்றமையும் கொழும்பு துறைமுக நகரச் செயற்றிட்டம் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையும் 2018இலிருந்து குறிப்பிடத்தக்க வெளிநாட்டு நேரடி முதலீட்டுப்பாய்ச்சல்களைக் கொண்டு வருமென எதிர்பார்க்கப்படுகிறது. இனிவரும் ஆண்டுகளில் ஆண்டுக்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகள் ஐ.அ.டொலர் 2–3 பில்லியனாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஆண்டுதோறும் ஏற்படுத்துமென்பதுடன் இது வளர்ச்சி மற்றும் தொழில்வாய்ப்புக்களை உத்வேகப்படுத்துவதற்கு மேலாக, படுகடனை உருவாக்காத உட்பாய்ச்சல்களை ஏற்படுத்துதல் மற்றும் ஏற்றுமதிகளைத் தூண்டுதல் என்பனவற்றின் மூலம் வெளிநாட்டுத் துறையின் தாக்குப்பிடிக்கும் தன்மையினையும் அதிகரிக்கும்.

திரவத்தன்மையின் போதுமான மட்டத்தையும் அடிப்படை அளவீட்டுக் குறியீட்டுடன் ஒப்பிடுகையில் நியாயமான வருவாயினையும் உறுதிப்படுத்தும் குறிக்கோளொன்றுடன் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளை உறுதிப்படுத்துவதனை முகாமைப்படுத்தும் விதத்தில் மத்திய வங்கி **உபாயச் சொத்து ஒதுக்குக் கட்டமைப்பின்** அடிப்படையிலமைந்த மாதிரியொன்றுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் ஒதுக்குகளைத் தொடர்ந்தும் முகாமைப்படுத்தும்.

பணவீக்க இலக்கிடலானது "எதிர்பார்ப்புக்களின் முகாமைத்துவம்" என நன்கு விளங்கிக் கொள்ளப்பட்டிருக்கின்றது. நாணயக் கொள்கையானது எதிர்கால வட்டி வீதங்கள், பணவீக்கம் மற்றும் உண்மைப் பொருளாதாரம் பற்றிய தனியார் துறையின் எதிர்பார்ப்புக்கள் மீதான அதன் தாக்கத்தினூடாக பணவீக்கத்தினையும் உண்மைப் பொருளாதாரத்தினையும் முக்கியமாகப் பாதிக்கிறது. இப்பின்னணியில், நாணயக் கொள்கையில் வெளிப்படையானதன்மை மிக முக்கியமானதாகும். இது **காத்திரமான தொடர்பூட்டலின்** மீது உயர் தன்மையொன்றினை ஏற்படுத்துகிறது. எமது தொடர்பூட்டல் மிக வெளிப்படையானதெனவும் நோக்கங்கள் அனைத்தையுமுள்ளடக்கியதெனவும் ஆர்வலர்களின் காத்திரமான எதிர்பார்ப்புக்களின் பொருட்டு இற்றைப்படுத்தப்பட்டிருக்கிறது எனவும் நாம் நம்புகிறோம். ஆகவே, புதிய கட்டமைப்பினை பொதுமக்கள் விளங்கிக் கொள்வதனை அதிகரிக்கும் பொருட்டு மத்திய வங்கியின் தொடர்பூட்டல் உபாயம் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

தொடர்பூட்டலை மேம்படுத்துவதற்கான பல்வேறு முன்னெடுப்புக்கள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவ்வழிகாட்டல் இத்தொடர்பூட்டல் கொள்கையின் மையத்தில் அமைந்திருக்கிறது. பல ஆண்டுகால பிரசுரங்கள், பத்திரிகை வெளியீடுகள் மற்றும் பத்திரிகை மாநாடுகள் என்பனவற்றினூடாக நடுத்தர காலப்பகுதியில் பொருளாதாரத்தின் பேரண்டப் பொருளாதார நெறிப்படுத்தல்களை நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். மேலும், நெகிழ்ச்சித்தன்மையுடைய பணவீக்க இலக்கிடலுக்காக ஏற்படுத்தப்பட்ட வழிகாட்டலின்படி நாணயக் கொள்கை மீளாய்வு கூற்றுக்களின் பகுப்பாய்வுப் பெறுமானங்களை அதிகரித்தல், நாணயக் கொள்கை அறிக்கைகளை கிரமமாக வெளியிடுதல், பணவீக்க அறிக்கைகளை வெளியிடுதல், பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை பரந்தளவு நடாத்துதல் என்பன உள்ளிட்ட பல நடவடிக்கைகள் நெகிழ்ச்சித்தன்மையுடைய பணவீக்க இலக்கிடலை நோக்கி மாறிச் செல்கின்ற எமது நிகழ்ச்சிநிரலில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

நாணயக் கொள்கை அறிவித்தலுக்காக முன்கூட்டியே **விடுவிக்கப்படும் கலண்டரை உருவாக்குகின்ற** எமது கடப்பாட்டினைப் பேணுகின்ற விதத்தில் 2018ஆம் ஆண்டிற்காக பின்வரும் கலண்டரினை நாம் அறிவிக்க விரும்புகின்றோம்.

**2018இன் நாணயக் கொள்கை அறிவித்தல்கள்**

| | |
|---|---|
| 1 | பெப்புருவரி 16, வெள்ளிக்கிழமை |
| 2 | ஏப்பிறல் 4, புதன்கிழமை |
| 3 | மே 11, வெள்ளிக்கிழமை |
| 4 | யூன் 29, வெள்ளிக்கிழமை |
| 5 | ஓகத்து 3, வெள்ளிக்கிழமை |
| 6 | செத்தெம்பர் 28, வெள்ளிக்கிழமை |
| 7 | நவெம்பர் 14, புதன்கிழமை |
| 8 | திசெம்பர் 28, வெள்ளிக்கிழமை |

வெற்றிகரமான நெகிழ்ச்சித்தன்மையுடைய பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பொன்றினை மத்திய வங்கியால் மாத்திரம் நடைமுறைப்படுத்த முடியாது. நாம் ஏற்கனவே வலியுறுத்தியவாறு **அரசாங்கத்தின் தொடர்ச்சியானதும் வலுவானதுமான கடப்பாடு** இணையான அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும்.

அரசாங்கத்தின் கொள்கை ஆவணமான "தொலைநோக்கு 2025 – வளமானதொரு நாடு" இல் நாணயக் கொள்கைக்கான புதிய கட்டமைப்பான நெகிழ்ச்சித்தன்மையுடைய பணவீக்க இலக்கிடலை நோக்கி மத்திய வங்கி நகர்வதனை அரசாங்கம் ஏற்கனவே அங்கீகரித்திருக்கிறது என்பது ஊக்கமளிப்பதாக இருக்கிறது.

பரந்துபட்ட இறை ஒழுங்குகளை நோக்கிய அரசாங்கத்தின் தொடர்ச்சியான வலுவான கடப்பாடும் வலுவான இறை நிலைமையும் நெகிழ்ச்சித்தன்மையுடைய பணவீக்க இலக்கிடலை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கான திறவுகோலாக விளங்குகின்றது. குறிப்பாக, பன்னாட்டு நாணய நிதியம் - விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஒழுங்குகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் நடுத்தர கால இறைத்திரட்சிக்கான கடப்பாடுகளை அரசாங்கம் பேணுமென எதிர்பார்க்கப்படுகிறது. தொடர்ச்சியான இறைத்திரட்சிகளினூடாக மேம்பட்டிருக்கும் இறை இடைவெளிகள் காத்திரமானதும் சுயாதீனதுமான நாணயக் கொள்கையை நடாத்துவதற்கான நல்லதொரு சூழலை உருவாக்கும்.

இவ்வனைத்து முயற்சிகளும் இறைத்திரட்சி உத்வேகத்தின் மீதான அரசின் கடப்பாடுகளை நிலைப்படுத்துவதனைத் தேவைப்படுத்துவதுடன் இது அரசின் நடுத்தர கால வரவு செலவுத்திட்ட கட்டமைப்பில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. ஏற்கனவேயுள்ள வருமான வரியமைப்பினை இலகுபடுத்தி ஒழுங்குமுறைப்படுத்தும் நோக்குடன் இயற்றப்பட்ட புதிய உண்ணாட்டரசிறைச் சட்டம் பெறுமதிசேர் வரிச் சீர்திருத்தங்கள் மற்றும் வரி நிருவாகங்களின் மேம்பாடுகள் என்பன பெறுமானம் மிக்க சாதனைகளாகும். மேலும், அரசாங்கம் பிணிக்கப்பட்ட இறை இலக்கிடல்களை உள்ளடக்குவதற்கு இறை முகாமைத்துவ (பொறுப்பாண்மை) சட்டத்தினைத் திருத்துவதன் மூலம் இறைத்திரட்சியை வலுப்படுத்துவதற்கு எதிர்பார்க்கிறது. இது, இறை ஒழுங்கிற்கான அதன் கடப்பாட்டினை நிறுவனமயப்படுத்தும் என்பதுடன், நாட்டின் வெளிநாட்டுப் படுகடன் இயக்கவாற்றல் மற்றும் தரமிடல் முகவர்கள் மற்றும் பன்னாட்டு மூலதனச் சந்தைக்கான வெளிப்படுத்துகை என்பனவற்றைக் கவனத்தில் கொள்கையில் அத்தியாவசியமானதாகும்.

மேலும், மத்திய வங்கியின் சுயநிர்ணயத்தினை அதிகரிப்பதற்கு இறை ஆதிக்கத்திலிருந்து நாணயக் கொள்கைகளைக் காப்பாற்றுவது மிக முக்கியமானதாகும். இதனைப் பொறுத்தவரை நெகிழ்ச்சித்தன்மையுடைய பணவீக்க இலக்கிடலுக்கு மாறிச் செல்வதற்கு முன்னர் நாணயக் கொள்கைக்கும் இறைக் கொள்கைக்குமிடையே தெளிவான வேறாக்கலொன்றினை உறுதிப்படுத்துவதற்கு மத்திய வங்கிக்கு வலுவான சட்ட மற்றும் நிறுவன ரீதியான பொறுப்பாணையொன்று தேவையென எதிர்பார்க்கப்படுகிறது. இது மத்திய வங்கியினால் இறைப் பற்றாக்குறையின் நாணய மயமாக்கல் கட்டம் கட்டமாக நிறுத்தப்படுவதனை தேவைப்படுத்துகிறது. இது ஆழமான மற்றும் திரவத்தன்மை நிதியியல் சந்தைக்கு வழியொன்றை ஏற்படுத்துவதுடன் மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நடவடிக்கைகளின் காத்திரமான பரிமாற்றச் செயன்முறைக்கான ஊக்கியொன்றாகவும் செயற்படும்.

நாங்களும் அரசாங்கத்தின் உத்தேச **பொறுப்பு முகாமைத்துவச் சட்டத்தினை** முன்மதியுடைய ஒரு உபாயமாக பார்க்கிறோம். இது பொதுப்படுகடனை கூடியளவு நெகிழ்ச்சித்தன்மையுடன் முகாமைப்படுத்துவதற்கு அரசாங்கத்தினை அனுமதிக்கிறது. இக்கட்டமைப்பின் கீழ் படுகடன் இருப்பில் மீண்டும் மீண்டும் உருவாகும் இடர்நேர்வுகளைக் குறைப்பதற்குப் பொதுப்படுகடன் முகாமையாளர்

தாங்கிருப்பு நிதியமொன்றினை உருவாக்கலாம். இது நாணய விதிச் சட்டத்தின் தற்போதைய ஏற்பாடுகளின்படி ஒவ்வொரு ஆண்டின் தொடக்கத்திலும் அரசாங்கத்திற்கு மத்திய வங்கி வழங்க வேண்டிய நிதியியல் உதவிகளை இல்லாதொழிக்கிறது. மிக முக்கியமான விடயம் யாதெனில் 2019இலிருந்து வெளிநாட்டுப் படுகடன் கொடுப்பனவுகளின் தற்போதைய ஒன்றுதிரண்ட தொகையினைத் தீர்ப்பதற்கான நிதியிடல்களைத் திரட்டுவதற்கு எந்தவொரு குறிப்பிட்ட ஆண்டிலும் அரசாங்கத்தின் கடன்பாட்டுத் தேவைப்பாடுகளுக்கு மேற்பட்ட ஒரு குறிப்பிட்ட தொகையை திரட்டுவதற்கு இது வசதியளிக்கும் என்பதாகும். பொறுப்பு முகாமைத்துவத்திற்கான பொறுப்புக்களை நீக்கும் பெறுகைகளை ஒதுக்கி வைக்கும் அரசாங்கத்தின் தீர்மானம் இது தொடர்பிலான மிகச் சாதகமான அபிவிருத்தியொன்றாக காணப்படுகிறது.

அதேவேளை, **அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளைச் சீர்திருத்துவதற்கான** அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு மிகப் பாராட்டத்தக்கவை. குறிப்பாக, எரிபொருள் மற்றும் மின்வலுவிற்கான தன்னியக்க விலையிடல் பொறிமுறைகளை முறையே 2018 மாச்சிலும் செத்தெம்பரிலும் அறிமுகப்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இது முக்கியமாக அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் எதிர்கால நிதியியல் இழப்புக்களைக் குறைப்பதற்கும் சில்லறை விலைகளின் அவ்வப்போது செய்யப்படும் பாரிய சீராக்கங்களைத் தவிர்ப்பதற்கும் நீண்ட தூரம் செல்வதாகவிருக்கும். இது காத்திரமான நாணயக் கொள்கையை மேற்கொள்வதற்கும் உதவியாக இருப்பது மட்டுமன்றி அரசாங்கத்தினதும் அரச வங்கிகளினதும் ஐந்தொகையின் மீது சாதகமான தாக்கத்தினையும் கொண்டிருக்கும்.

நாம் அறிந்தவாறு, மத்திய வங்கியால் தனித்து பொருளாதாரத்திலுள்ள பணவீக்கத்தினையும் பணவீக்க எதிர்பார்ப்புக்களையும் முகாமைப்படுத்திக் கொள்ள முடியாது. பணவீக்கத்தினைப் பாதிக்கின்ற நிரம்பல்பக்கக் காரணிகளின் மீது இது செல்வாக்கைச் செலுத்த முடியாது. கேள்வி தூண்டல் பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்துவதில் நாணயக் கொள்கை காத்திரமானதாக இருக்கின்ற போதும் **பணவீக்கத்தின் மீதான நிரம்பல்பக்க அழுத்தங்களை முகாமைப்படுத்துவதில்** அரசாங்கத்தின் ஆதரவு இன்றிமையாததாக இருக்கிறது. இது தொடர்பில் நிரம்பல்பக்க அதிர்வுகளைக் குறைத்து இதன் மூலம் பணவீக்கம் கட்டுப்படுத்தப்படுவதற்கு தக்க தருணத்தில் அரசாங்கத்தின் ஆதரவு தேவைப்படுகிறது.

நெகிழ்ச்சித்தன்மையுடைய பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் பிரதான முற்தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக அரசாங்கத்தினதும் மத்திய வங்கியினதும் கூட்டுமுயற்சி மற்றும் கடப்பாடு என்பனவற்றினூடான அடுத்துவரும் மூன்று ஆண்டுகளில் பல முக்கிய மைல்கற்களை அடைய வேண்டிய தேவை காணப்படுகிறது. 2020 அளவில் நெகிழ்ச்சித்தன்மையுடைய பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பிற்கு அலுவல்சார் ரீதியாக நிலைமாறிச் செல்வதற்கு முன்னதாக கிட்டிய எதிர்காலத்தில் சட்ட திருத்தங்கள், இறைத் திரட்சியைத் தொடர்தல், நாணயம் மற்றும் இறைக் கொள்கை செயன்முறைகளுக்குத் தேவைப்படும் மாற்றங்களை நிறுவன மயப்படுத்தல் மற்றும் விழிப்புணர்வினையும் பொதுமக்களின் நம்பகத்தன்மையினையும் கட்டியெழுப்புதல் என்பன முன்னுரிமை வாய்ந்த விடயங்களாகக் காணப்படுகின்றன.

இது தொடர்பில் ஏற்கனவே குறிப்பிடப்பட்டவாறு நெகிழ்ச்சித்தன்மையுடைய பணவீக்க இலக்கிடலைப் பின்பற்றுதல் தொடர்பான அவசியமான சீர்திருத்தங்களையும் புத்தாக்கங்களையும் மேலோட்டமாகக் குறிப்பிடுதல் என்பனவற்றிற்காக நாம் வழிகாட்டலை உருவாக்கியுள்ளோம். இது நிறுவன ரீதியான பண்புகள், அமைப்பியல் ரீதியான பண்புகள், தொழிற்பாட்டு ரீதியான பண்புகள், நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தல், செலாவணி வீதக் கொள்கை மற்றும் வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகள் அதேபோன்று இயலாற்றலைக் கட்டியெழுப்புதல் என்பனவற்றைப் பெருமளவில் கொண்டிருந்த வேளையில் நிர்ணயிக்கப்பட்ட பொருளாதார இலக்குகளை அடைவதற்கு இறை மற்றும் நாணயக் கொள்கைகள் இரண்டினையும் இணைந்து செல்ல வைப்பதும் பெருமளவில் இலக்காகக் கொண்டுள்ளது.

எமது நாணயக் கொள்கை நடவடிக்கைகளையும் நெறி ஆளுகைகளையும் உருவாக்கும் பொழுது **வெளிநாட்டுச் சூழலை** நாம் கருத்தில் கொள்ளாதிருக்க முடியாது. உலகளாவிய நிதியியல் நெருக்கடிக்குப் பின்னர் முதல் தடவையாக உலகளாவிய பொருளாதாரத்தின் முக்கிய பொருளாதாரங்களுக்கிடையே நாணயக் கொள்கை தொடர்பில் தற்பொழுது பிறழ்வுகள் காணப்படுகின்றன. இது மூலதன மற்றும் நாணயச் சந்தைகளில் பெருமளவு தளம்பல்களைத் தோற்றுவிக்கக்கூடும். இது விழிப்புடன் இருக்குமாறு எம்மைத் தேவைப்படுத்துகிறது. ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐக்கிய இராச்சியம் போன்ற முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களிலும் அதேபோன்று, தோற்றம் பெற்றுவரும் பொருளாதாரங்களில் காணப்படும் வட்டி வீத உயர்வுகள் மூலதன மீள்ஒதுக்க நியதிகளில் இலங்கையின் பொருளாதாரத்தின் மீது சில கசிவுத் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடும் என்பதனை நாம் அறிந்துள்ளோம். அதேவேளை, முக்கிய ஏற்றுமதிச் சேரிடங்களின் பொருளாதார மற்றும் அரசியல் அபிவிருத்திகள் அதேபோன்று முக்கிய பண்டங்களின் விலைகளின் போக்குகள் என்பன உள்நாட்டுப் பொருளாதாரத்தின் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தினைக் கொண்டிருக்கும்.

## 3. 2018இற்கும் அதற்கு அப்பாலுக்குமான நிதியியல் துறைக் கொள்கைகள்

மத்திய வங்கியின் பொறுப்பாணையின் மூலம் வழிகாட்டப்படுகின்ற, மத்திய வங்கி நீடித்துநிலைத்திருக்கும் வளர்ச்சிக்கு உதவும் இயக்கவாற்றலும் தாக்குப்பிடிக்கக்கூடியதுமான நிதியியல் துறையினை முக்கியமாக ஒழுங்குவிதிகள், நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை, ஆற்றல்வாய்ந்ததும் பாதுகாப்பானதுமான கொடுப்பனவு முறைமைகளை உறுதிப்படுத்தல், இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகளை நிறுவுதல் மற்றும் நிதியியல் துறையில் சிறந்த கம்பனி ஆளுகை நியமங்களையும் நடைமுறைகளையும் புகுத்துதல் என்பனவற்றினூடாக ஊக்குவிக்கிறது.

பன்னாட்டுத் தர நியமங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கு இசைவாக, மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் வருகின்ற நிதியியல் நிறுவனங்களுடன் தொடர்புபடுகின்ற ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை கட்டமைப்பினை வலுப்படுத்தி இதன் மூலம் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினை உறுதிசெய்வதற்கு 2017ஆம் ஆண்டில் மத்திய வங்கியானது பல கொள்கை மறுசீரமைப்புகளை அறிமுகப்படுத்தியது. பெயர்பெற்ற மற்றும் சிறந்த அனுபவத்தினைக் கொண்ட தொழில் துறை சார்ந்தோர், நிபுணர்கள் அதேபோன்று நிதியியல் துறையிலுள்ள நிறுவனங்கள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் சபைகளிலிருந்தான பிரதிநிதிகள் ஆகியோரை உள்ளடக்கிய நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு ஆலோசனைக் குழுவினை 2017இல் நாம் மீள நிறுவியிருப்பது குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும்.

முன்னோக்கிச் செல்கையில் நிதித் துறையானது நாடு முழுவதிலும் அதற்கு அப்பாலும் விரைந்து வளர்ச்சியடைவதினாலும் விரிவுபடுவதனாலும் எழக்கூடிய துறைவாரியான அமைப்பிலுள்ள மாற்றங்களுக்கும் சவால்களுக்கும் போதியளவு இடவசதியளிக்கின்ற சட்டவாக்கத்தின் மூலம் **வங்கித்தொழில் துறை** வழிநடாத்தப்படுகின்றது என்பதனை உறுதிசெய்வதற்கு வங்கித்தொழில் சட்டம் திருத்தப்பட வேண்டிய மிக உயர்ந்த தேவையொன்று காணப்படுகின்றது. இலங்கை மத்திய வங்கியானது வங்கித்தொழில் துறையிலுள்ள அனைத்து தொடர்புடைய ஆர்வலர்களுடன் முன்கூட்டிய செயற்பாடு சார்ந்த விதத்தில் பணியாற்றுவதுடன் கிட்டிய காலத்தில் புதிய வங்கித்தொழில் சட்டத்தினை இறுதிப்படுத்துவதற்கும் எதிர்பார்க்கின்றது.

வங்கித்தொழில் துறைக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை கட்டமைப்பினை வலுப்படுத்துவது எமது நிதியியல் துறைக் கொள்கையின் மையமொன்றாக தொடர்ந்தும் இருக்கின்றது. எனவே, பரிசோதனைகளின் நோக்கானது முழுமையாக இணங்குவித்தல் மீது மாத்திரம் கரிசனை செலுத்துகின்ற விதிகளினை அடிப்படையாகக் கொண்டதன்றி தனிப்பட்ட வங்கிகளினதும் முழுமையான வங்கித்தொழில் துறையினதும் வினைத்திறன், காத்திரமானதன்மை மற்றும் நீடித்துநிலைத்திருக்கும் தன்மை என்பனவற்றிற்கும் கவனம் செலுத்துகின்ற ஒன்றாகும் என்பதை உறுதிசெய்வதற்கு வங்கிப் பரீட்சிப்பு முறையியலை நாம் தரமுயர்த்தி தொடர்ச்சியாக மேம்படுத்தி வருகின்றோம். அதற்கமைய, வங்கிகளின் வினைத்திறனையும் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையினையும் கணிப்பிடும் அளவுசார் மற்றும் தகைமைசார் குறிகாட்டிகள் இரண்டினையும்

அடிப்படையாகக் கொண்டு வங்கிகளுக்கான தரப்படுத்தலினை வழங்குவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாண்டுப்பகுதியில் ‘‘தலத்திலான பரீட்சிப்பு’’ அணுகுமுறையிலிருந்து ‘‘இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட’’ மேற்பார்வை அணுகுமுறைக்கு மாறிச் செல்வதை வசதிப்படுத்துவதற்கு, வங்கி நீடித்துநிலைக்கும் தன்மை இடர்நேர்வு சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட வங்கிப் பரீட்சிப்பு முறையியலைப் பூர்த்தி செய்வதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். மேலும், அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளினதும் பரீட்சிப்பு அறிக்கைகளில் வங்கி நீடித்துநிலைக்கும் தன்மை இடர்நேர்வு சுட்டெண்ணை நிறுவுவதற்கும் 2019ஆம் ஆண்டிலிருந்து படிப்படியான அடிப்படையொன்றில் செயற்படத்தக்கவாறு வங்கிகளுக்கு மேற்பார்வை தரப்படுத்தல் நிலையொன்றினை வழங்குவதற்கும் நாம் உத்தேசிக்கின்றோம்.

வங்கியானது பாசல் III இன் நடைமுறைப்படுத்தலில் ஈடுபட்டு வருவதுடன் 2019 சனவரி 01ஆம் நாளிற்கு முன்னர் நடைமுறைப்படுத்தல் பூர்த்திசெய்யப்படவுள்ளது. இவ்வாண்டின் போது வங்கிகள் அவற்றின் மூலதன போதுமை விகிதாசாரத்தினை மேம்படுத்துவது தொடர்பாக பணியாற்றி வருகின்ற அதேவேளை, வங்கிகள் செயற்பாடுமிக்கவாறு மூலதனத் தாங்கிருப்புக்களைக் கட்டியெழுப்புகின்றன என்பதனை உறுதிசெய்வதற்காக உள்நாட்டின் முறையியல் சார்ந்த வங்கிகள் மீது மூலதன பாதுகாப்பு தாங்கிருப்புக்களும் மிகைக் கட்டணங்களும் விதிக்கப்பட்டு வருகின்றன. தற்போதுள்ள ஆகக்குறைந்த மூலதன தேவைப்பாடுகளை அதிகரிப்பதற்கான பணிப்புரையானது இத்தாங்கிருப்புக்கள் மிகவும் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையில் காணப்படுகின்ற என்பதனை உறுதிசெய்வதற்காக மூலதன தரத்தினை மேம்படுத்துவதனை இலக்காக கொண்டிருந்தன. இது, மிகையான கடன் வளர்ச்சி அத்துடன்/ அல்லது பாதகமான பொருளாதார நிலைமைகளைக் கொண்ட காலகட்டத்தின் போது வங்கித்தொழில் துறையினை பாதுகாப்பதற்கு உதவும். வங்கிகள் ஒன்றுடனொன்று இணைக்கப்பட்டுள்ள தன்மையிலிருந்து தோன்றுகின்ற முறையியல் சார்ந்த இடர்நேர்வினையும் இது குறைக்கும்.

பாசல் III வழிகாட்டலின் கீழ், அவர்களது சொத்து உள்ளமைப்பிற்கும் ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்பாடுகளுக்கும் உரிய கவனம் செலுத்தி தேறிய நிலையான நிதியளித்தல் விகிதாசாரமொன்று தொடர்பிலான வழிகாட்டல்களுடன் இணங்கியொழுகுவதற்கும் வங்கிகள் வேண்டப்படும். இது தொடர்பில் ஆலோசனைப் பத்திரமொன்று ஏற்கனவே வங்கிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் தொடர்புடைய நியமம் இவ்வாண்டின் போது நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. முடுக்கி விகிதாசாரமானது வேறு இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட மூலதன தேவைப்படுத்தல்களுக்கு குறைநிரப்பும் எளிய, வெளிப்படையான மற்றும் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்டிராத கருவியொன்றாக அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இவ்விகிதாசாரத்துடன் தொடர்புடைய வழிகாட்டல்களின் நடைமுறைப்படுத்தலானது வங்கித்தொழில் துறையின் மிகையான முடுக்கி விகிதாசாரம் தோன்றுவதனை தடுப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தினை நாம் தொழிற்படுத்துகின்ற வேளையில் நெருக்கடி முகாமைத்துவம் மற்றும் தீர்மானக் கட்டமைப்புத் திட்டம் காத்திரமான மேற்பார்வைக்கு முன்நிபந்தனையாகக் காணப்படுகின்றது. வங்கிகளுக்கு வழிகாட்டுவதற்கான பொருத்தமான மீட்புத் திட்டங்களைப் பேணுவதுடன் தொடர்பான அனைத்து ஆர்வலர்களுடன் நெருங்கிப் பணியாற்றி வருகின்றோம். நிதியியல் சொத்துக்களைப் பொருத்தமாகப் பகுப்பாய்வு செய்தல் மற்றும் அளவிடலை உறுதிப்படுத்துவதற்காகவும் இவ்வாண்டுப் பகுதியில் இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 இனைப் பின்பற்றுவது தொடர்பான ஆரம்ப வழிகாட்டல்களும் விடுக்கப்படவுள்ளன. இடர்நேர்வு முகாமைத்துவச் செயன்முறைகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக நிதியியல் பெறுதி கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் வங்கிகளுக்கு பணிப்புரைகள் ஏற்கனவே விடுக்கப்பட்டுள்ளன. மேலும், உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவின் சொத்துக்களுடன் மாத்திரம் தொடர்புபட்ட முன்னைய பணிப்புரைகளுக்குப் பதிலாக, வங்கியொன்றின் மொத்தச் சொத்துக்களின் அடிப்படையில் வெளிநாட்டு நாணயக் கடன்பாட்டு வரையறைகளின் மீது புதிய பணிப்புரைகள் விடுக்கப்படுகின்றன.

வங்கிதொழில் துறைக்காக பல்வேறு புதிய அபிவிருத்திகள் ஆயத்தநிலையில் காணப்படுவதனால், தகைமை பெற்ற கணக்காய்வாளர்கள் குழாமொன்றினைத் தெரிவு செய்வதற்கான தற்போதுள்ள பிரமாணங்களையும் பொறிமுறைகளையும் மீளாய்வு செய்வது அத்தியாவசியமானது என்பதை நாம் உணர்கின்றோம். வங்கித்தொழில் மேற்பார்வை மீதான பாசல் குழுவின் வழிகாட்டல்களும் இதனை வலியுறுத்துகின்றன. நடைமுறையிலுள்ள மதிப்பீட்டு செயன்முறையினை வலுப்படுத்துவதற்கும் கணக்காய்வுகளின் தரத்தினை உயர்த்துவதற்கும் தற்போதுள்ள பிரமாணங்களும் தெரிவுச் செயன்முறையும் கடுமையான மீளாய்வொன்றுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் மூலம் வளர்ந்துவரும் இடர்நேர்வுகள் மற்றும் பாசல் III கட்டமைப்பு நடைமுறைப்படுத்தலின் தாக்கம் மற்றும் அடுத்த சில ஆண்டுகளினுள் நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய கணக்காய்வு நியமங்கள் போன்றவற்றினைக் கையாளும் விதத்தில் கணக்காய்வாளர்களின் நிலை உயர்த்தப்படும்.

வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களின் இடர்நேர்வு முகாமைத்துவத்தினை வசதிப்படுத்தும் நோக்குடன் கிளவ்ட் கணனி மயப்படுத்தல் பாவனை மீது வங்கித்தொழில் தொழிற்பாடுகளை மேலும் டிஜிட்டல் மயப்படுத்தல், ஒழுங்குமுறைப்படுத்தல் எதிர்பார்ப்புக்களை வரையறை செய்வதனையும் மற்றும் தொடர்புடைய நிதியியல் தொழில்நுட்ப தீர்வுகள் பயன்பாட்டின் மீது ஆகக்குறைந்த ஒழுங்குவிதிகளை வரையறை செய்வதனையும் ஊக்குவிப்பதற்காக பல கொள்கைகள் அறிமுகப்படுத்தப்படும். மேலும், வங்கிகளின் தொழில்நுட்ப இடர்நேர்வின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை மதிப்பிடுவதற்கும் மேம்படுத்துவதற்குமாக அனைத்தையுமுள்ளடங்கிய இடர்நேர்வு கணிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டமொன்று மேற்கொள்ளப்படும்.

கடந்த ஐந்து ஆண்டுகளின் போது வங்கித்தொழில்துறை ஏறத்தாழ ஆண்டுதோறும் 15 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ள அதேவேளை, **வங்கியல்லா நிதி நிறுவனங்கள் துறையானது** ஏறத்தாழ 23 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது. துறையானது ஒப்பீட்டளவில் நிதியியல் முறைமையின் மொத்தச் சொத்துக்களின் ஏறத்தாழ 8 சதவீதம் கொண்ட சிறிய பங்கொன்றிற்கு வகைகூறுகின்ற போதிலும் துறையின் விரைவான வளர்ச்சியும் பரந்தளவிலான சென்றடைவுகளும் முன்கூட்டிய செயற்பாடு மிக்க மேற்பார்வையினையும் ஒழுங்குமுறைப்படுத்தல் வழிகாட்டல்களையும் அவசியப்படுத்துகின்றன. இந்நிறுவனங்களை வலுப்படுத்துவதற்கு பல ஒழுங்குவிதிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அதேவேளை சில உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள் அழுத்தத்திற்கான சமிக்ஞைகளை காண்பிக்கின்ற அதேவேளையில் வேறு சில உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் துரித விரிவாக்கமானது ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் அவற்றின் இணங்கிச் செல்லும் தன்மை குறைவாக இருந்தமையின் காரணமாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. ஒட்டுமொத்த முறைமையின் மீதும் துறையின் ஆற்றல்வாய்ந்த தன்மையினை உறுதிசெய்வதற்கும் அதன் கசிவுத் தாக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்கும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் தற்போதுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினைத் தொடர்ந்தும் வலுப்படுத்துவதற்கான தேவை மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படுகிறது. உபாய முதலீட்டாளர்களின் மூலம் அத்தகைய நிதிக் கம்பனிகளை ஒன்றிணைத்தல் மற்றும் மீள் மூலதனமாக்கலூடாக அத்தகைய பலயீனங்களைத் தீர்ப்பதற்கான முயற்சிகள் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டுள்ளன. பணிப்பாளர் சபைக்குப் புறம்பாக, இந்நிறுவனங்களின் மூத்த முகாமைத்துவத்தினரும் இந்நிறுவனங்களின் தொழிற்பாடுகளுக்குச் சமமான முறையில் பொறுப்புடையவர்களாவர். வைப்பாளர்களின் நலவுரித்துக்களைக் கவனத்தில் கொண்டு, தேவைப்படுமாயின், மத்திய வங்கி தவறிழைத்த மூத்த முகாமைத்துவத்தினருக்கெதிராக சட்ட ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதனையும் பரிசீலனையில் கொள்ளும். நிதியியல் நிறுவனங்கள் தொடர்பிலான பிரச்சினைகள், தடைசெய்யப்பட்ட திட்டங்கள் நுழைவதனைத் தடுத்தல் மற்றும் ஏனைய அதிகாரமளிக்கப்படாத நிதியியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்றவற்றினை நடைமுறைப்படுத்தல் மற்றும் தீர்வுகள் தொடர்பில் கடமைகளை ஆற்றுகின்ற அதேவேளை செலாவணி முகாமைத்துவத்துடன் தொடர்புடைய மீறுகைகளை தடைசெய்வதனை உறுதிசெய்வதற்கும் வங்கியின் சட்டம் மற்றும் இணங்குவித்தல் திணைக்களத்தில் "நடைமுறைப்படுத்தல் பிரிவு" ஒன்றினை நாம் 2017இன் நடுப்பகுதியில் நிறுவியுள்ளோம். இந்தப் பிரிவானது 2018 சனவரி 01ஆம் நாளன்று ஓர் முழுமையான திணைக்களமாக மாற்றப்பட்டது.

எமது கண்காணிப்பு பொறிமுறைகளை அதிகரிப்பதற்கும் நாம் வழிமுறைகளை மேற்கொண்டுள்ளோம். முன்கூட்டிய எச்சரிக்கை முறைமைகளுக்கான மேம்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டின் போது, முன்கூட்டிய செயற்பாடுமிக்க மற்றும் உரிய காலத்திற்கான வழிகாட்டல்களை வழங்குவதற்கு இந்த முறைமை உதவியளித்தது. இதற்கு மேலதிகமாக, தற்போதுள்ள உள்ளக பொறிமுறையும் மீளாய்வுச் செயன்முறையொன்றிற்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

வழிகாட்டல் 2017 அறிவிக்கப்பட்டவாறு, உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளினதும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைவிடும் கம்பனிகளினதும் மூலதன மட்டங்களை மேலும் வலுப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது. ஆகக் குறைந்த மையமூலதன தேவைப்படுத்தல் 2018 சனவரி 1 அளவில் ரூ.400 மில்லியனில் இருந்து ரூ.1 பில்லியனுக்கும் அதனைத் தொடர்ந்து 2019இல் ரூ.1.5 பில்லியனுக்கும் 2020இல் ரூ.2 பில்லியன் தொகைக்கும் மேல்நோக்கி திருத்தப்பட்டுள்ளது. மூலதன நிலைமையினை வலுப்படுத்துவது தற்போதுள்ள நிறுவனங்களின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை மேம்படுத்துகின்ற அதேவேளை அதிகளவு நிதியியல் வினைத்திறனையும் செயற்றிறனையும் கொண்ட கம்பனிகள் மாத்திரம் இத்துறையில் நிலைத்திருப்பதற்கு ஊக்குவிக்கும். சந்தையினால் தூண்டப்பட்ட கையேற்பு அல்லது ஒருங்கிணைப்பினூடாக கிட்டிய எதிர்காலத்தில் துறையின் சீரான திரட்சிப்படுத்தலுக்காக மேம்படுத்தப்பட்ட மூலதன நிலைமைகளும் அத்தியாவசியமானவை. கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையத்தில் கடன் தரப்படுத்தலைப் பெற்றுக்கொள்ளுவதற்கும் சுயமாக பட்டியற்படுத்துவதற்கும் உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு குத்தகைக்குவிடும் கம்பனிகளை ஊக்கப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடல்களும் தற்போது நடைபெற்று வருகின்றன. இதன் பலனாக, நிதியியல் உறுதித்தன்மையும் தொழிற்பாட்டு மேன்மையும் உறுதி செய்யப்பட்டு, அதேவேளை ஆரோக்கியமான போட்டித்தன்மையும் உருவாக்கப்படுகிறது. இடர்நேர்வுகளுக்கான உணர்திறனை மேம்படுத்தும் நோக்குடன் உரிமம் பெற்ற நிதிக் கம்பினகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் 12 சதவீதம் கொண்ட மூலதனப் போதுமை விகிதத்தினை பெறும் விதத்தில் பணிப்புரைகளை விதிப்பதனை நாம் பரிசீலனையில் கொண்டுள்ள வேளையில் கடன்பாட்டாளரின் இடர்நேர்வுத் தோற்றப்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட கொடுகடன் இடர்நேர்வுகளின் மீதும் வர்த்தக ஏட்டிலுள்ள தொழிற்பாடு மற்றும் சந்தை இடர்நேர்வின் மீது கவனத்தினைச் செலுத்துகின்றோம்.

உறுதியானதும் வலுவானதுமான வங்கியல்லா நிதித் துறையினை உறுதிசெய்யும் நோக்குடன் உரிமம் பெற்ற நிதியியல் நிறுவனங்கள், சிறப்பியல்வு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளை வலுவான நிதியியல் நிறுவனங்களாக நிலைநிறுத்துவதற்குச் சந்தையினால் தூண்டப்பட்ட கையேற்புக்களும் ஒருங்கிணைப்புக்களும் ஊக்குவிக்கப்படவுள்ள வேளையில் துறையிலுள்ள உறுதியற்ற சிறயளவு நிதிக் கம்பனிகள் குறைக்கப்படும்.

நிதி வர்த்தகச் சட்டமானது, துறையின் பரிணாமமடைந்துவரும் பண்புகளுக்கு உரிய கவனம் செலுத்துகின்ற விதத்தில் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கு தற்போது சீரமைக்கப்பட்டு வருகின்றது. அதற்கமைய, உரிமம பெற்ற நிதிக் கம்பனிகள், சிறப்பியல்பு குத்தகைக்குவிடும் கம்பனிகள் மற்றும் அதிகாரமளிக்கப்படாத நிறுவனங்கள் போன்றவற்றின் தீர்மானங்களுடன் தொடர்புபட்ட ஏற்பாடுகளை உள்ளடக்கும் விதத்தில் இது திருத்தப்பட்டு வருகின்றது. மோசடியான செயற்பாடுகளுக்காக வழக்காடல் பொறிமுறையொன்றின் மீது கவனம் செலுத்தப்படும் அதேவேளை பொது நிதியங்களை தவறாக கையாண்டல் செய்தவர்களின் வழக்குத்

தொடுப்புகளையும் விரைவுபடுத்துவதையும் உறுதிசெய்யும். இத்துடன் இசைந்து செல்லும் விதத்தில் வாடிக்கையாளர் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்கும் இணைந்து காணப்படும் ஒழுங்கீனங்களைத் தடுப்பதற்கும் வாடிக்கையாளர் பட்டயமொன்று அண்மையில் வெளியிடப்பட்டிருக்கிறது.

ஒழுக்கநெறியற்ற கடன் வழங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் தொடர்பில் விசேடமாக வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலுள்ள நிறுவனங்கள் பற்றியும் பொதுமக்களுக்கு கடன் சுமைகளை அதிகரித்தல் பற்றியும் பரந்தளவிலான கரிசனையொன்று காணப்படுகின்றது. அத்தகைய நடவடிக்கைகளைத் தடுக்கும் அதேவேளை உறுதியான விதமொன்றில் இப்பிரச்சினைகள் கையாளப்படும் என்பதனை வலியுறுத்துவதற்கும் நாம் அத்தகைய நிறுவனங்கள் மற்றும் அரசாங்க முகவராண்மைகள் உள்ளடங்கலாக ஏனைய பொது ஆர்வலர்களுடன் மிக செயற்பாட்டுடன் ஈடுபட்டு வருகின்றோம். பொதுமக்கள் விழிப்புணர்வானது அத்தகைய சமூக இடையூறுகளைத் தடுக்கும் என நாம் வலுவாக நம்புகின்றோம். இதனால், வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனங்களில் மாத்திரம் முதலிடுவதன் நன்மைகள் பற்றி வழியுறுத்துகின்ற அதேவேளை அதிகாரமளிக்கப்படாத முதலீட்டுத் திட்டங்களில் ஈடுபடுவதன் ஆபத்துப் பற்றி பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்கான பொதுமக்கள் நிகழ்ச்சித் திட்டமொன்றினை நாம் தொடர்ந்தும் மேற்கொள்வோம். மேலும் கிரமமான அடிப்படையொன்றில் முதனிலை வணிகர்களின் கொடுக்கல்வாங்கல்களின் இடர்நேர்வினை மதிப்பிடுவதற்கான மேற்பார்வை பொறிமுறையொன்றினையும் உருவாக்குவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.

நாட்டின் பரந்த பொருளாதாரத்தின் அபிவிருத்திகளை தொடர்ச்சியாக கண்காணிப்பதற்கு செயற்பாடுமிக்க **பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்பிலும்** ஒட்டுமொத்த நிதியியல் உறுதிப்பாட்டின் மீதான அவற்றின் தாக்கத்தினை மதிப்பிடுவதிலும் நாம் ஈடுபட்டுள்ளோம். உற்பத்தித்திறனற்ற துறைகளுக்கு மிதமிஞ்சிய கடன்வழங்கல், வங்கியல்லா நிதித் துறையின் மொத்த சொத்துக்களின் வளர்ச்சியிலான தொடர்ச்சியான வீழ்ச்சி, குறைந்த மூலதனத் தாங்கிருப்புக்கள் மற்றும் நலிவடைந்த நிதிக் கம்பனிகளின் பிரசன்னம் போன்ற பிரச்சனைகளை இக்கண்காணிப்பு முயற்சிகள் எடுத்துக்காட்டியுள்ளன. அதற்கமைய, அடுத்துவரும் சில ஆண்டுகளில் திரவத்தன்மை மற்றும் வட்டி வீத இடைவெளிகள் மற்றும் பல்நாணய வெளிநாட்டு செலாவணி இடர்நேர்வுகளைப் பகுப்பாய்வு செய்தல், நிதி நிறுவனங்களின் ஊக்கவாற்றல்களை கண்காணித்தல், நிதியியல் துறையின் கடன் இடர்நேர்வு மதிப்பீடுகளினை அதிகரித்தல் போன்றவற்றினூடாக பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்பிற்கான நிறுவன ரீதியான கட்டமைப்பினை நாம் தொடர்ந்தும் வலுப்படுத்துவோம். பேரண்ட முன்மதியுடைய எமது கண்காணிப்பின் பாகமொன்றாக உள்நாட்டு நிதியியல் முறைமைக்கான முழுமையான இடர்நேர்வினை இனங்காண்பதற்காக ஆண்டிற்கு இருமுறை என்ற அடிப்படையில் இடர்நேர்வு தொடர்பான முழு அளவீடொன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மிகச் சிக்கலான கண்காணிப்பு முறைமையின் பாகமொன்றாக நிதியியல் சூழற்சி வட்டம் மற்றும்

வர்த்தக சுழற்சி வட்டம் என்பவற்றை அடையாளம் காண்பதற்கும் பகுப்பாய்வு செய்வதற்கும் வசதிப்படுத்தும் கட்டமைப்பொன்று உருவாக்கப்படவுள்ளது, உரிமம் பெற்ற நிதிக் கம்பனிக்களுக்காக பல்மாறி அழுத்தப் பரீட்சிப்பு உருவாக்கப்படவுள்ளது. இதற்கு மேலாக வீட்டுத் துறை கடன் சுமை பற்றிய நாடளாவிய மதிப்பீடு ஒன்று நடாத்தப்படவுள்ளது.

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு உட்கட்டமைப்பினை வலுப்படுத்துவது மட்டுமன்றி குறைந்த காசில் தங்கியிருக்கும் சமூகமொன்றினை நோக்கி மாறிச் செல்வதற்கும் வசதியளிக்கும் வழிமுறைகளைப் பின்பற்றுவதிலும் அதனை நடைமுறைப்படுத்துவதிலும் இவ்வாண்டில் மத்திய வங்கி தீவிரமான ஈடுபாட்டினைக் கொண்டிருந்தது. 2018ஆம் ஆண்டுப்பகுதியில் பொதுப் போக்குவரத்து மற்றும் சமூக நன்மைத் திட்டங்கள் போன்றவற்றுடன் தொடர்பான குறைந்த செலவிலான கொடுப்பனவு அட்டையினை அறிமுகப்படுத்துவதனை வசதியளிப்பதற்கான தேசிய அட்டைத் திட்டத்தின் நடைமுறைப்படுத்தலை நாம் கண்காணிப்போம். பின்டெக் உற்பத்திகளின் அதிகரித்த நுழைவு காரணமாக அத்தகைய உற்பத்திகள் மற்றும் அவற்றின் பயன்பாட்டிற்கான இணங்குவிப்புத் தேவைப்பாடுகளை விபரிக்கும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பொன்றினை நிறுவ வேண்டியிருக்கும்.

மேலும், அண்மைய காலங்களில் அவதானிக்கப்பட்டவாறு **சைபர் பாதுகாப்பு** எமது நிதியியல் துறையின் உறுதிப்பாட்டிற்கும் நம்பகத்தன்மைக்கும் அச்சுறுத்தலாக விளங்குகிறது. மத்திய வங்கியின் பாதுகாப்பினை பலப்படுத்துவதற்கு மட்டுமன்றி வங்கிகள் மற்றும் ஏனைய நிதியியல் நிறுவனங்களின் மைய முறைமைகள் வலுவான முறையில் பாதுகாக்கப்படுகின்றன என்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில் நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டிருக்கின்றன. இது தொடர்பில் எதிர்காலத்தில் தொழிற்பாட்டிற்கு வரக்கூடிய கொடுப்பனவு விண்ணப்பங்களுக்காக கொடுப்பனவு விண்ணப்பங்கள் தரவு பாதுகாப்பு நியமங்கள் பின்பற்றப்படுவதனை மத்திய வங்கி ஊக்குவிக்கிறது. பற்று/ வரவு அட்டைகள், இணையத்தள வங்கித்தொழில் மற்றும் செல்லிடத் தொலைபேசியை அடிப்படையாகக் கொண்ட வங்கித்தொழில் கொடுக்கல்வாங்கல்களுக்காக அதேநேர குறுங்தகவல்/ மின்னஞ்சல் எச்சரிக்கைகளுக்கு நாம் பொறுப்பாணை வழங்கியிருக்கிறோம். விற்பனை மையத்திற்கான கொடுக்கல்வாங்கல்கள், இணையத்தள வங்கித்தொழில் அதேபோன்று கணனி வழி அதேநேர மற்றும் செல்லிடத் தொலைபேசி மூன்றாந்தரப்பு நிதிய மாற்றல்களுக்கு இரு காரணி உறுதிப்படுத்தல்கள் பின்பற்றப்படும். மேலும், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமை உட்கட்டமைப்பின் நவீனமயப்படுத்தலுக்கு வசதியளிக்கும் பொருட்டு பின்வரும் கொள்கைகள் பின்பற்றப்படும்.

- பங்கேற்கும் நிறுவனங்களுக்கு அதேநேர பாரிய பெறுமதி கொண்ட நிதிய மாற்றல்களுக்கு வசதியளிப்பதற்காகவும் அதனைக் கண்காணிப்பதற்காகவும் மிக நவீனத்துவம் வாய்ந்த அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையொன்றைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளில் மத்திய வங்கி ஈடுபட்டிருக்கிறது.

- பொதுவாக, வாடிக்கையாளர்களையும் நிதியியல் முறைமையினையும் பாதுகாக்கும் பொருட்டும் செல்லிடத் தொலைபேசிகளை அடிப்படையாகக் கொண்ட இ-பண முறைமைகளின் சுமூகமான தொழிற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காகவும் மத்திய வங்கி இம்முறைமைகளின் தலத்திலான மற்றும் தலத்திற்கு வெளியேயான மேற்பார்வையினைத் தொடர்ந்தும் மேற்கொள்ளும்.
- இ-வணிக வர்த்தகப்படுத்தல் மற்றும் இணையத்தள கொடுப்பனவு நுழைவு வழி என்பனவற்றின் பாதுகாப்பான வழிப்படுத்தல்களை இயலுமைப்படுத்துவதற்காக ஒழுங்குமுறைப்படுத்துநர் என்ற ரீதியில் மத்திய வங்கி பொதுமக்களின் நலவுரித்துக்களைப் பாதுகாக்கும் பொருட்டு இ-வணிக வர்த்தகப்படுத்தல் பணிகளை வழங்குவோருக்காக நியமங்கள் வடிவில் தொடர்ச்சியாக கண்காணிப்பினையும் வழிகாட்டல்களையும் வழங்கி வரும்.
- டிஜிட்டல் கொடுப்பனவுப் பொறிமுறை/ முறையியலுக்கு மாறும் விதத்தில் இலங்கையில் காசோலைப் பயன்பாட்டைக் குறைப்பதற்கு கொள்கைகள் பின்பற்றப்படும். ஏதேனும் இலத்திரனியல் சில்லறைக் கொடுப்பனவு முறைமையினூடாக கொடுப்பனவு அறிவுறுத்தல்களை அனுப்புவதற்கு தனியார் துறை மற்றும் அரச நிறுவனங்களுக்கு வசதிகளும் ஊக்குவிப்புக்களும் மத்திய வங்கியினால் வழங்கப்படும்.
- டிஜிட்டல் சூழல் முறைமைக்குள்ளே தற்போதைய முழு நிதியியல் கொடுக்கல்வாங்கல் உட்கட்டமைப்பினையும் மாற்றுவதற்கு பதிவுச் சங்கிலி தொழில்நுட்பமானது முக்கியமான வகிபாகமொன்றினை ஆற்றுவதனால், நாட்டின் ஒழுங்குவிதிகளுக்கமைவாக நிதியியல் நிறுவனங்களுக்கும் பணிகளுக்கும் பகிரப்பட்ட பேரேட்டு முறைமைகளின் ஒருங்கிணைப்பும் வசதியளிக்கப்படும்.
- டிஜிட்டல் நாணயங்களுக்கான உலகளாவிய பிரபல்யத்தன்மை அதிகரித்து வருவதன் காரணமாக நாட்டின் தற்போதைய பொருளாதாரத் தோற்றப்பாட்டில் டிஜிட்டல் சட்டபூர்வ நாணயத்தின் தாக்கத்தினைத் தீர்மானிக்கும் பொருட்டு மத்திய வங்கி ஆய்வொன்றினை மேற்கொள்வதற்கு எண்ணியிருக்கிறது.
- தற்பொழுது கிடைக்கத்தக்கதாகவுள்ள மற்றும் தொடர்ச்சியான அடிப்படையில் உத்தேசிக்கப்பட்டுள்ள கொடுப்பனவு மாதிரிகள் தொடர்பில் அடிமட்டத்திலிருந்து நிறுவனங்கள் ரீதியான மட்டங்கள் வரை விழிப்புணர்வினை உருவாக்குவதற்காக மத்திய வங்கி அடிப்படை பகுப்பாய்வு அணுகுமுறையொன்றினை பயன்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டிருக்கிறது.
- கொடுப்பனவு அட்டைகள் மற்றும் செல்லிடக் கொடுப்பனவுகளின் புதிய அபிவிருத்திகளுக்கு வசதியளிக்கும் பொருட்டு, மத்திய வங்கி திருத்தப்பட்ட கொடுகடன் அட்டை வழிகாட்டல்களை விடுக்க எண்ணியுள்ளதுடன் செல்லிடத் தொலைபேசி மென்பொருட்களுக்குக் குறைந்தபட்ச இணங்குவிப்பு நியமங்கள் மீதான வழிகாட்டல்கள் செல்லிடத் தொலைபேசி மென்பொருட்களுக்கான கொடுப்பனவுப் பணிகளைத் தொழிற்படுத்துகின்ற, வசதிப்படுத்துகின்ற, வழங்குகின்ற ஏதேனும் நிறுவனங்களுக்கே ஏற்புடைத்தாகும்.

நிதியியல் புலனாய்வுச் சூழலை வலுப்படுத்தும் நோக்குடன், நிதியியல் நடவடிக்கை செயலணிக் குழுவின் விதந்துரைப்புக்களை மிகக் காத்திரமான முறையில் நடைமுறைப்படுத்துவதற்காக பணம் **தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல்** மீதான கொள்கைகளை அபிவிருத்தி செய்வதற்காக ஆர்வலர்களுடன் தொடர்ந்தும் இணைந்திருப்போம். பன்னாட்டு விதந்துரைப்புக்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டம் மற்றும் 2006ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க பணம் தூயதாக்கலுக்கெதிரான சட்டம் என்பனவற்றைத் திருத்துவதற்கு/ இரத்துச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். குற்றவியல் விடயங்கள் சட்டத்தின் பரஸ்பர உதவிகள், அரசுசார்பற்ற நிறுவனங்கள் சட்டம் மற்றும் நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் சட்டம் என்பனவற்றைத் திருத்துவதற்கு ஆர்வலர்களுடன் வசதிப்படுத்தல் மற்றும் இணைப்பு நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்வோம்.

2014இல் முக்கிய ஆர்வலர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எழுபதிற்கு மேற்பட்ட தொழில்சார் நிபுணர்களின் ஆதரவுடன் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாத நிதியிடலை ஒழித்தல் தொடர்பான தேசிய இடர்நேர்வு மதிப்பீடொன்றினை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்டது. 2018இல் நாம் தேசிய இடர்நேர்வு மதிப்பீட்டு அறிக்கையினை இற்றைப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வோம். ஆர்வலர்கள் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாத நிதியிடலை ஒழித்தல் தொடர்பில் புள்ளிவிபரங்களைப் பேணும் பொருட்டு தனிப்பட்ட தரவுத் தளத்தினை அபிவிருத்தி செய்வதற்கு ஆர்வலர்களுக்கு உதவுவதற்காக இலங்கையின் தகவல் மற்றும் தொடர்பூட்டல் முகவருடனும் இணைப்புக்களை மேற்கொள்வோம்.

மேலும், அதிகளவில் பெருகிவரும் நிதியிடல் மீதான ஐக்கிய நாடுகளின் தீர்மானங்களை (ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை 1718 மற்றும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை 2231) நடைமுறைப்படுத்துவதற்காக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுடனும் ஏனைய ஆர்வலர்களுடனும் நாம் இணைப்புக்களை மேற்கொண்டு வருகிறோம். மேலும், எமது பன்னாட்டு கடப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் ஒத்துழைப்புக்களை வலுப்படுத்திக் கொள்வதற்காகவும் எக்மவுண்ட் குழுமம் உட்பட பன்னாட்டுச் சமூகத்துடன் நாம் தொடர்ந்தும் இணைப்பிலிருந்து வருகிறோம்.

2017ஆம் ஆண்டுப்பகுதியில், மத்திய வங்கி, உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளுக்குப் பணிப்புரைகளை விடுத்ததன் மூலமும் தன்னார்வ சமூகப் பணிகள் அமைப்புக்களின் பதிவாளருக்கு கோட்பாடுகளையும் நியமங்களையும் வழிகாட்டல்களையும் விடுத்ததன் மூலமும் நுண்பாக நிதி அரசுசார்பற்ற நிறுவனங்களின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வையின் மூலமும் **நுண்பாக நிதித் துறைக்கான** ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினைத் தொடர்ந்தும் வலுப்படுத்தியது. பொருத்தமான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு, நுண்பாக நிதி வாடிக்கையாளர்களுக்காக ஒருமுகப்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பு என்பனவற்றினூடாக வைப்புக்களை ஏற்காத நுண்பாக கொடுகடன் நிறுவனங்களை ஒழுங்குமுறைப்படுத்தல் உட்பட இத்துறையினை மிகக்

காத்திரமான ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான திருத்தங்களுக்கு ஆலோசனை வழங்கும் பொருட்டு நுண்பாக நிதிச் சட்டத்தினை மீளாய்வு செய்யும் நடைமுறையினை நாம் மேற்கொண்டு வருகின்றோம். நுண்பாக நிதிக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை பொறிமுறையினை வலுப்படுத்துவதற்காக அடுத்துவரும் காலப்பகுதியில் மேலும் பணிப்புரைகளை விடுப்பதற்கு நாம் திட்டமிட்டிருக்கிறோம்.

மேலும், நுண்பாக நிதிச் சட்டத்தின் அதிகார வரம்பிலிருந்து விலக்களிக்கப்பட்ட பெரும் எண்ணிக்கையிலான ஒழுங்குமுறைப்படுத்துநர்களினால் நுண்பாக நிதி நிறுவனங்கள் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டு வருவதன் காரணமாக அனைத்தையுமுள்ளடக்கிய விதத்தில் நுண்பாக நிதித் துறையினை ஒழுங்குமுறைப்படுத்துவது இடர்ப்பாடானது என்பதனை நாம் அடையாளம் கண்டிருக்கிறோம். ஆகவே, இவ்வாண்டுப் பகுதியில் நுண்பாக நிதி நிறுவனங்களின் அனைத்தையுமுள்ளடக்கிய ஒழுங்குமுறைப்படுத்துநர்களை உள்ளடக்கிய ஒழுங்குமுறைப்படுத்துநர்களிடையேயான குழு ஒன்றினைக் கூட்டுவதற்கு இருக்கிறோம்.

மற்றைய நிதி நிறுவனங்களை ஒழுங்காக்குவது தொடர்பில் நாம் ஒவ்வொரு சாத்தியமான முயற்சிகளையும் மேற்கொள்கின்ற வேளையில் எமது சொந்த நிறுவனத்தினையும் ஒழுங்கில் வைத்திருத்தல் வேண்டும். இதற்கு இசைவாக, **தொழில்முயற்சியின் அடிப்படையிலான இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு** மற்றும் இணங்குவிப்புக்களை வலுப்படுத்தல் என்பனவற்றை நடைமுறைப்படுத்துவது எமது முன்னுரிமைக்குரிய உபாயங்களில் ஒன்றாக அடையாளம் காணப்பட்டிருக்கிறது. இடர்நேர்வு முகாமைத்துவத் துறையிலுள்ள மத்திய வங்கித்தொழிலில் புதிய போக்குகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் தொழில்முயற்சியின் அடிப்படையிலான இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பினை நடைமுறைப்படுத்துவது இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கான அனைத்தையுமுள்ளடக்கிய வியாபார அணுகுமுறையினை நோக்கி நகரும் விதத்தில் ‘‘மூடப்பட்ட அடிப்படையிலான’’ அணுகுமுறையிலிருந்து வெளியேறுவதற்கு உதவுகிறது. தொழில்முயற்சியை அடிப்படையாகக் கொண்ட இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு அனைத்து மட்டங்களுக்குமிடையேயான முரண்பாடற்ற அடிப்படைகள் மற்றும் அமைப்பியல் சார்ந்த ஒழுங்குமுறைகளுடன் கூடிய ஒருமுகப்படுத்தப்பட்ட அணுகுமுறைகளைப் பயன்படுத்தி அமைவிடங்கள் மற்றும் திணைக்களங்கள் அனைத்து இடர்நேர்வுகளையும் ஒருங்கிணைக்கப்பட்ட முறையில் மேற்பார்வை செய்வதற்கும் மத்திய வங்கி முழுவதிலும் இடர்நேர்வு முகாமைத்துவத்தினை நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல், மீளாய்வு செய்தல் மற்றும் தொடர்ச்சியாக மேம்படுத்தல் என்பனவற்றை இயலுமைப்படுத்துகிறது. கூடியளவு தகவல்களுடன் கூடிய இடர்நேர்வுகளை அறிந்த மேல் மட்டத்தில் செய்யப்படும் தீர்மானங்களுக்கு நாம் ஆதரவளிக்கும் அதேவேளையில் இடர்நேர்வுகளைத் தணிக்கும் காலாச்சாரத்தினை வலுப்படுத்துவதிலும் உள்ளக ஆளுகைகளை அதிகரிப்பதிலும் இடர்நேர்வு முகாமைத்துவ செலவுகளை உச்சப்படுத்துவதிலும் மூலவளங்களைச் சிக்கனமான முறையில் பயன்படுத்துவதனை ஊக்குவிப்பதிலும் நாம் ஈடுபட்டிருக்கின்ற அதேவேளையில் ஆர்வலர்களினதும் சமூகத்தினதும் நம்பிக்கையினை பெருமளவிற்குக் கட்டியெழுப்பி வருகிறோம்.

முக்கியமான மூலமொன்றாக "மூன்று அடுக்குப் பாதுகாப்பு" மாதிரியொன்றுடன் சேர்த்து புதிய இடர்நேர்வு ஆளுகை மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ அமைப்பொன்று நிறுவப்படுவதற்கு எதிர்பார்ப்பதுடன் மத்திய வங்கி முழுவதற்குமாக ஒட்டுமொத்த இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கைக் கூற்றொன்று நடைமுறைக்கிடப்படும். பன்னாட்டு ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் அபிவிருத்தியடைந்து வரும் இடர்நேர்வு பதிவேடுகளுக்கான முன்னுரிமை மற்றும் தொடர்பான தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு அபிவிருத்திகளுடன் சேர்ந்த தற்செயல் நிகழ்வுகளை அறிக்கையிடுகின்ற பொறிமுறை என்பனவற்றிற்கு முன்னுரிமை வழங்கப்படும். மத்திய வங்கியின் முழு விடயங்களையும் நடைமுறைப்படுத்துவது வங்கியில் இடர்நேர்வு மற்றும் இணங்குவிப்புக் கலாச்சாரத்தினை மனதில் பதிய வைப்பதற்கு உதவும். மேலும், தரமிடல் முறைமையின் இசைந்து செல்லும் இணங்குவிப்புக்களுடன் நடைமுறைப்படுத்தக்கூடிய உலகளாவிய அடிப்படை அளவு குறியீடொன்றுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் இணங்குவிப்பு கட்டமைப்பொன்று அபிவிருத்தி செய்யப்படும்.

## 4. பரந்த பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கான கொள்கைகள்

இதுவரையில் நாம் கலந்தாராய்ந்தது என்னவெனில், மத்திய வங்கியின் மையத் தொழிற்பாடுகளுடன் இணையப்பெற்ற எதிர்காலத் திட்டங்களும் கொள்கைகளுமாகும். இக்கொள்கைகளுக்கு மேலதிகமாக, வேறுபல நடவடிக்கைகளிலும் நாம் ஈடுபட்டுள்ளோம். இவற்றை அரசாங்கத்தின் சார்பிலான துணைத் தொழிற்பாடுகள் மற்றும் முகவர் தொழிற்பாடுகள் என குறிப்பிடுகின்றோம்.

**நாணய முகாமைத்துவம்**

நீங்கள் அறிந்தவாறு, பொதுமக்களின் பாவனைக்கு நாணயம் கிடைக்கப்பெறுகின்றது என்பதனை உறுதிசெய்வதற்கு மத்திய வங்கி எப்போதும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்பதுடன் 2017இல் இதனை நாம் தொடர்ந்தும் முன்னெடுத்த அதேவேளை நாணயத் தொழிற்பாடுகளையும் செயன்முறைப்படுத்தல்களையும் மேம்படுத்துவதற்கு சகல முயற்சிகளையும் எடுத்தோம்.

மிக முக்கியமாக, குறைபாடுகளற்ற நாணயத் தாள்களை உறுதி செய்யும் நோக்குடன் புதிதாக அச்சிடப்படும் நாணயத் தாள்களின் தரத்தினை மேம்படுத்துவதற்காக நாணயத் தாள்களைத் தனித்தனியாகப் பரீட்சிக்கும் முறைமையொன்றினை நாம் அறிமுகப்படுத்தியுள்ளோம். சந்தைக்கு பாதுகாப்பான மற்றும் தங்குதடையற்ற நாணயப்பாய்ச்சலினை வசதிப்படுத்தும் பொருட்டு வேறு பல உள்ளகச் செயன்முறைகளும் மேம்படுத்தப்பட்டு தரமுயர்த்தப்பட்டன.

முன்னோக்கிச் செல்கையில், நாணயத்தின் தரநிர்ணயங்களைப் பேணுவது மத்திய வங்கியின் நாணய முகாமைத்துவக் கொள்கையில் தொடர்ந்தும் முக்கிய இடத்தை வகிக்கும். இந்நோக்கில், **தூய்மையான நாணயத் தாள் கொள்கையினை** நடைமுறைப்படுத்துவதனை மேலும் வலுப்படுத்துவதற்கும் தூய நாணயத் தாள் சுற்றோட்டத்தினூடாக வெளிநாட்டுப் பிரசைகள் மத்தியில் இலங்கை பற்றிய நன்மதிப்பினை அதிகரிக்கும் நோக்குடனும் வேண்டுமென்றே சேதப்படுத்தப்பட்ட, மாற்றம் செய்யப்பட்ட அல்லது உருச்சிதைக்கப்பட்ட நாணயத் தாள்களை 2018 ஏப்பிறல் 1ஆம் திகதி முதல் ஏற்றுக்கொள்வதை தவிர்க்குமாறு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

நாணயக் குத்தியின் உலோகங்களை மாற்றுவதன் மூலம் 2018இல் புதிய குத்தித் தொடரொன்றினை வெளியிடுவதற்கும் நாம் திட்டமிடுகின்றோம். இது குத்திகளை தயாரிக்கும் செலவினைக் குறைக்கும் அதேவேளை அவற்றின் பாவனைக் காலத்தினையும் அதிகரிக்கும்.

நடுத்தர காலத்தில், நாணயத் தொழிற்பாடுகளை மேம்படுத்துவதற்காக அதி நவீன காசு நிலையம் ஒன்றினை நிறுவுவதற்கும் நாம் உத்தேசிக்கின்றோம். அத்துடன், நாட்டில் கேள்வியினை நிறைவுசெய்வதில் குத்தி விநியோகத்தினையும் மீள்சுற்றோட்டத்தினையும் சீராக்குவதற்கு தீவுமுழுவதும் குத்தி விநியோக/ மீள்சுழற்சி இயந்திரங்களை நிறுவதற்குத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## பொதுப்படுகடன் முகாமைத்துவம்

பாரியளவு படுகடன் இருப்பொன்றினை முகாமை செய்கின்ற அதேவேளை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியளித்தலுக்கிடையில் முறையான கலப்பு ஒன்றினை பேணுவதில் சவால்மிக்க அதிகூடிய முன்னுரிமைப்படுத்துவதில் ஒன்றாக முன்மதியுடைய படுகடன் முகாமைத்துவத்தினை நாம் கருதுகின்றோம். உண்மையில், ஊழல்வாய்ப்பு மிக்க படுகடன் சுழற்சியிலிருந்து விலகிச் செல்வதற்கு படுகடன் நீடித்துநிலைத்திருக்காத தன்மையினை உறுதிசெய்வதற்கான அதன் பணியில் மத்திய வங்கி உபாய முன்னிரிமையொன்றாக முன்மதியுடைய படுகடன் முகாமைத்துவத்தினை ஏற்படுத்தியுள்ளது. நீங்கள் அனைவரும் அறிந்தவாறு அரசாங்கத்தின் படுகடன்களைத் திரட்டுதல், முகாமை செய்தல் மற்றும் கடன்களின் தீர்ப்பனவு என்பவற்றிற்கு மத்திய வங்கி பொறுப்புடையதாக இருப்பதுடன் அரசாங்கத்தின் நிதியளித்தல் தேவைப்பாடுகள் சரியான நேரத்தில் சாத்தியமான ஆகக்குறைந்த செலவில் நிறைவேற்றப்படுவதனை உறுதிசெய்யும் அதேவேளை அரசாங்கம் சார்பில் பெற்றுக்கொள்ளப்படும் படுகடன்களின் நீடித்துநிலைக்கும் தன்மையினை உறுதிசெய்யும் குறிக்கோளுடன் அதன் பணிகளைக் கொண்டு நடாத்துகின்றது.

முன்னைய வழிகாட்டலில் எடுத்துக்காட்டப்பட்டவாறு, படுகடன் முகாமைத்துவ தொழிற்பாடுகளின் வெளிப்படைத்தன்மையினை அதிகரிப்பதற்கு 2017இல் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 2017இன் யூலையில் அரசாங்கத்தின் உள்நாட்டு கடன்பாடுகளின் வினைத்திறனையும் வெளிப்படைத்தன்மையினையும் மேலும், அதிகரிப்பதற்காக 2017 யூலையில் திறைசேரி முறிகளுக்கான புதிய முதன்மை வழங்கல் முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

முதலாந்தர ஏலச் செயன்முறைகளினதும் அரசாங்கப் பிணையங்கள் சந்தையினதும் வெளிப்படைத்தன்மை மற்றும் ஊகத்தன்மை போன்றவற்றை மேலும், அதிகரிக்கும் நோக்குடன் மீண்டும் மீண்டும் நிகழும் அடிப்படையொன்றில் மத்திய வங்கியின் வெப்தளத்தில் அரசாங்கப் பிணையங்களுக்கான வழங்கல் கலண்டர் ஒன்றினை நாம் வெளியிட்டுள்ளோம்.

முன்னோக்கிப் பார்க்கையில், 2018ஆம் ஆண்டில் பொதுப்படுகடன் முகாமைத்துவத்தின் பாதுகாப்பு, வினைத்திறன் மற்றும் வெளிப்படைத்தன்மையினை மேலும் அதிகரிப்பதற்கு நாம் தொடர்ந்தும் பணியாற்றுவோம். 2018இன் ஆரம்பப்பகுதியில் பொறுப்பு முகாமைத்துவச் சட்டம் இயற்றதலுக்குட்பட்டு பொறுப்பு முகாமைத்துவ நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பொதுப்படுகடன் இருப்பினை முகாமைசெய்வதற்கு பொதுப்படுகடன் இருப்பின் அடிப்படை இடர்நேர்வு தோற்றப்பாட்டினை மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இது வெளிநிற்கும் படுகடன் இருப்பின் முதிர்ச்சித் தோற்றப்பாட்டினை எச்சரிப்பதன் மூலம் படுகடன் இருப்பின் மீள்நிதியளித்தல் இடர்நேர்வினைக் குறைப்பதற்கு எம்மை இயலச்செய்யும். அத்துடன்,

காலப்பகுதியை அதிகரிப்பதற்கு மட்டுமன்றி செலவினைக் குறைப்பதற்கும் இம்முயற்சியின் கீழ் மீண்டும் கொள்வனவு செய்தல், மாறுதல் மற்றும் முன்நிதியிடல் ஒழுங்குகள் போன்ற செயற்பாடுகள் கண்டறியப்படும்.

மிக முக்கியமாக, நீண்டகால விளைவு வளையியைக் கட்டியெழுப்புவதற்கு இயலச்செய்கின்ற அதேவேளை படுகடன் நலிவுத்தன்மைகளைக் குறைப்பதற்கு உதவும் படுகடன் தோற்றப்பாடு முன்மதிமிக்க திரட்டுதலுடன் கூடிய படுகடன் கட்டமைப்பினைச் சீரமைப்பதற்கும் நம்பகரமான வட்டிவீத தவணைக் கட்டமைப்பொன்றினைத் நிறுவதற்கும் நடுத்தர காலத்தில் அனைத்து அவசியமான நடவடிக்கைகளையும் நாம் எடுப்போம். கடந்த காலங்களில் படுகடன் கொடுப்பனவு தொடர்பில் தூய்மையான மற்றும் கறைபடியாத பதிவுகளைக் கொண்டிருந்தோம். இது தொடரப்பட வேண்டுமென்பதுடன் இதைத் தொடர்வதற்கு சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

திறைசேரி முறிகளுக்குப் போன்று, உள்நாட்டுச் சந்தையிலிருந்தான அரச கடன்பாடுகளின் வெளிப்படைத்தன்மையினையும் வினைத்திறனையும் மேலும் அதிகரிப்பதற்காக திறைசேரி உண்டியல்களுக்கான புதிய முதலாந்தர வழங்கல் முறைமையொன்றினை அறிமுகப்படுத்துவதற்கும் நாம் நடவடிக்கைகளை எடுப்போம்.

அரசாங்க பிணையங்களுக்கான இரண்டாந்தரச் சந்தையினை ஆழமாக்கும் பொருட்டும் விரிவுபடுத்தும் பொருட்டும், தேவையான சட்ட மறுசீரமைப்புக்களுடன் அரசாங்க பிணையங்களுக்கான இலத்திரனியல் வர்த்தகப்படுத்தல் தளமொன்றினையும் மத்திய இணைத்தரப்பினர் ஏற்பாடு ஒன்றினையும் நிறுவுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இவ்வேற்பாட்டின் ஊடாக சந்தையில் வெளிப்படைத்தன்மையினை அதிகரிக்கவும் சந்தையிலுள்ள முகவர்கள் மத்தியில் சரியான தகவல்களைக் கொண்டிராத இடர்நேர்வினை இல்லாதொழித்தல் ஆகிய நோக்கங்களுடன் இரண்டாந்தரச் சந்தையில் படுகடன் சாதனங்கள் பற்றிய தகவல்களைப் பரப்புவதற்கு நாம் பொறிமுறையொன்றினை நிறுவுவோம்.

இதற்கு மேலதிகமாக, அரசாங்கப் பிணையங்களின் யூரோ தீர்ப்பனவினை வசதிப்படுத்துவதன் வாயிலாக முதலீட்டாளர்களுக்கான தீர்ப்பனவின் வினைத்திறனையும் செயற்றிறனையும் அதிகரிப்பதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம்.

அதேபோன்று நடுத்தர காலத்திற்காக அரசாங்கம் தெளிவான அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்புத் திட்டத்தினை ஏற்படுத்தியுள்ளது. இவ்வபிருத்திச் செயன்முறைக்கு உதவும் பொருட்டு அரசாங்கம் சார்பில் மத்திய வங்கியானது நடுத்தர காலப் படுகடன் முகாமைத்துவ உபாயத்தின் பரந்த சாராமாறிகளினுள் அபிவிருத்தி நிதியின் மூலமொன்றாக வெளிநாடுகளிலிருந்து ஒப்பீட்டளவில் குறைந்த செலவு நிதியங்களின் வர்த்தக மூலங்களை நாம் தொடர்ந்தும் பயன்படுத்த முயற்சிப்போம்.

**ஊழியர் சேம நிதிய முகாமைத்துவம்**

நீங்கள் அனைவரும் அறிந்ததைப் போன்று, பாதுகாப்பு கட்டுக்காவலனாக இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபைக்கு ஊழியர் சேம நிதிய முகாமைத்துவத்துடன் தொடர்புடைய அனைத்து அதிகாரங்களும் பொறுப்புகளும் உரித்தளிக்கப்பட்டுள்ளன. நாட்டின் மிகப் பெரிய ஓய்வுகால நிதியமான ஊழியர் சேம நிதியமானது ரூ.2.0 றில்லியனை விஞ்சுகின்ற மொத்த நிதி சொத்துக்களுடன் இவ்வாண்டின் போது குறிப்பிடத்தக்க மைல்கல்லொன்றினைக் கடந்தது. கடந்த ஐந்து ஆண்டுகளின் போது ஏறக்குறைய பதின்மூன்று சதவீதக் கூட்டுச் சராசரி வளர்ச்சி வீதத்தினால் வளர்ச்சியடைந்தது.

தொழிற்பாட்டுச் செயற்பாடுகளைச் சீராமைப்பதன் வாயிலாக அங்கத்தவர்களுக்கு வழங்கப்படும் பணிகளின் ஒட்டுமொத்த தரத்தினை மேம்படுத்துவதற்கு 2017இல் பல வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. இது அங்கத்தவர்களின் பங்களிப்புச் செயன்முறைகளை தன்னியக்கப்படுத்தல், அங்கத்தவர் கணக்குகளை அதேநேர முறையில் இற்றைப்படுத்தல் மற்றும் விரைந்த மீளளிப்புக் கொடுப்பனவு போன்றவற்றின் மூலம் எய்தப்பட்டது. இலத்திரனியல் தளமொன்றினூடாக ஊழியர் சேம நிதிய கூற்றுக்களை தொழில்தருநர்கள் சமர்ப்பிப்பதற்கு அவர்களுக்கு வழங்கப்படும் பணிகளுக்கு குறிப்பிடத்தக்க மேம்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த அதேவேளை, ஊழிய சேம நிதி கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் வசதிக்கு இணையத்தளமூடான வங்கித்தொழில் வசதியினை வழங்குவதற்கு சில உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் சிலவற்றுடனும் நாம் ஒருங்கிணைந்துள்ளோம். மேலும், நிதி முகாமைத்துவத்தின் ஆளுகை கட்டமைப்பினை மேம்படுத்துதல் மீது பாரிய முக்கியத்துவம் கொண்டு நிதி முதலீட்டுச் செயன்முறையின் பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை என்பவற்றை அதிகரிப்பதற்காக, இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கான ஓர் சுதந்திரமான உள்ளகத் திணைக்களத்தினை நிறுவுதல் உள்ளடங்கலான பல வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. உள்ளக வழிமுறைகளைப் பன்னாட்டு சிறந்த நடைமுறைகளுக்கிணங்க மேம்படுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கியிலிருந்து உதவி பெறப்பட்டது. முன்னைய ஆண்டுகளைப் போன்றே இலாபத்தன்மை, மேலும் முன்மதியுடைய முதலீடுகள் என்பனவற்றினூடாக தமது நிதி நிலுவைகள் மீது ஆகக்கூடிய சாத்தியமான இலாபங்களை நாம் தொடர்ந்தும் அங்கத்தவர்களுக்கு வழங்கியுள்ளோம்.

2018ஆம் ஆண்டில், நிதி தொடர்புடைய செயற்பாடுகளில் பொறுப்புக்கூறும்தன்மை வெளிப்படைத்தன்மை மற்றும் ஒட்டுமொத்த செயலாற்றுகை என்பவற்றை மேலும் அதிகரிப்பதற்கு நாம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவோம். ஊழியர் சேம நிதிய தொடர்புபட்ட செயற்பாடுகளுக்கான ஒட்டுமொத்த இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பினை வலுப்படுத்தலும் 2018இல் முக்கிய முன்னுரிமைகளுக்கு மத்தியில் இடம்பெறும். இந்நோக்கில், முதலீட்டு மற்றும் நிதி முகாமைத்துவ செயற்பாடுகளை வினைத்திறன்மிக்கவாறு நடாத்துவதில் மிக முக்கியமாக விளங்கும் தொடர்ச்சியான பயிற்சி மற்றும் அபிவிருத்தியூடாக நிறுவனம்சார் கொள்ளளவினை மேலும் அதிகரிப்பதற்கு நாம்

முயற்சிகளை மேற்கொள்ளுவோம். இலங்கைக்கான மூலதன சந்தை அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்தான தொழில்நுட்ப உதவியும் எமது கொள்ளளவு அபிவிருத்தி முயற்சிகளுக்கு பாரியளவில் பங்களிப்புச் செய்யும். மிக முக்கியமாக, நாம் எம்மிடமுள்ள அவர்களது சேம நிதிகளின் மீது சிறந்த சாத்தியமான வருவாய்களை எமது அங்கத்தவர்களுக்கு வழங்குவதற்கு முன்மதிமிக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம். மேலும், அரசாங்கத்தின் ஆலோசனையுடன் ஊழியர் சேம நிதியம் தொடர்புபட்ட கொடுக்கல்வாங்கல்களுக்காக தனித்துவம் மிக்க அடையாள இலக்கமொன்றாக புதிய உயிரியல் அமைவுருவினைக் கொண்ட தேசிய அடையாள அட்டை இலக்கத்தினைப் பயன்படுத்துவதற்கு கொள்கைத் தீர்மானமொன்று ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளது. அதேநேர ஆவண பிரதிமைப்படுத்தல் ஸ்கானிங் செயற்றிட்டம் மற்றும் பணிப்பாய்ச்சல் முகாமைத்துவ முறைமை ஆகியவற்றை அறிமுகப்படுத்துவதனூடாக ஊழியர் சேம நிதியத்திற்காக கிட்டத்தட்ட காகிதங்களற்ற தொழிற்படுத்தல் சூழலொன்றினை அறிமுகப்படுத்தும் பொறுப்பினை நிறைவேற்றுவதற்கு நாம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம்.

**வெளிநாட்டு நாணய முகாமைத்துவம்**

2017ஆம் ஆண்டுக்கான வழிகாட்டலில் அறிவிக்கப்பட்ட முன்மொழிவுகளின் வெற்றிகரமான நடைமுறைப்படுத்தலினைத் தொடர்ந்து அரசாங்க கொள்கையினை நடைமுறைப்படுத்தும் பொருட்டு புதிய வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவ கட்டமைப்பொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. அதற்கமைய, புதிய வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்குப் பதிலாக வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம் நிறுவப்பட்டது. இதற்கு மேலதிகமாக, 2017ஆம் ஆண்டில் மூலதன கொடுக்கல்வாங்கல்களை மேலும் இலகுபடுத்துவதற்காக நாம் பல கொள்கைகளை நடைமுறைப்படுத்தியுள்ளோம். மேலும், 2018இலும் அதற்கு அப்பாலும் நடைமுறைப்படுத்தப்படவுள்ள வெளிநாட்டுச் செலாவணிக் கொள்கைகள், உலகளாவிய வர்த்தக சூழலில் இலங்கைக்கான போட்டி அநுகூலத்தினை ஊக்குவிப்பதற்காக நாட்டின் நடைமுறைப் பேரண்டப் பொருளாதார கொள்கை உறுதிப்பாட்டுடன் ஒருங்கிணைப்பதனை உறுதி செய்வதனை முக்கிய கவனத்தில் கொண்டுள்ளது.

காத்திரமான கண்காணிப்பு பொறிமுறையொன்றினை அறிமுகப்படுத்தும் நோக்கில் வெளிநாட்டு செலாவணிப் பாய்ச்சல்களை திரட்டுவதனுடன் தொடர்புபட்ட முறைகளை இனங்காணுதலூடாக பேரண்டப் பொருளாதார தீர்மானித்தினை மேற்கொள்வதற்கான சிறந்த தரவுத்தளமொன்றினை தோற்றுவிக்கும் பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்காகவும் மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களுக்காகவும் புதிய "நிகழ்நேர" அறிக்கையிடுதல் மற்றும் கண்காணிப்பு முறை அறிமுகப்படுத்தப்படவுள்ளது. சந்தை ஒழுக்காற்றினைக் கொண்டு வருவதற்காக இணங்கிக் கொள்ளாமையினை கண்டுபிடித்தல் மற்றும் குறைத்தல் நோக்குடன் அறிக்கையிடுதல் தேவைப்படுத்தல் பகுதியொன்றாக தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு வலுப்படுத்தப்படும்.

## பிராந்திய அபிவிருத்தி

நாட்டில் நிதியியல் பணிகள் மற்றும் சமச்சீரான பிராந்திய வளர்ச்சியினை மேம்படுத்துவதற்கும் வேளாண்மை மற்றும் விலங்குவளர்ப்பு, நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில் முயற்சி துறைகளின் அபிவிருத்தியினை இலக்காகக் கொண்டு மீள்நிதியளித்தல் வட்டி உதவுதொகை அத்துடன்/ அல்லது கடன் உத்தரவாதங்கள் மற்றும் கடன் குறைநிரப்பு சேவைகள் போன்றவற்றை வழங்கும் நோக்குடன் பங்களிகின்ற நிதியியல் நிறுவனங்களூடாக பல சலுகை அபிவிருத்தி கடன் திட்டங்களை நிறைவேற்றுவதனைத் தொடர்ந்தது. செயற்றிறன்மிக்க கடன் வழங்குவதனை வலுப்படுத்தும் பொருட்டும் முறையான நிதித் துறை சென்றடைவினை விரிவுபடுத்துவதற்கும் 2017இன் போது பல கடன் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

மேலும், மத்திய வங்கி கொடுகடன் பாய்ச்சல் மற்றும் கொடுகடனுடன் இணைந்த பணிகள் என்பனவற்றை அதிகரிப்பதன் மூலமும் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்திகளை எய்துவதற்கு நிதியல்லா ஆதரவினை வழங்குதல் மற்றும் சமூகத்தின் பின்தங்கிய பிரிவினரை முறைசார்ந்த நிதியியல் துறைக்குள் கொண்டு வருவதற்காக தூண்டுதலளிக்கும் நிதியியல் சூழலை உருவாக்குதல் என்பன மூலம் பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளுக்கும் வசதியளிக்கின்றது. நாட்டிற்காக தேசிய நிதியியல் உள்ளீட்டு உபாயத்தினை அபிவிருத்தி செய்வதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருக்கிறது.

இதற்கு மேலதிகமாக, கடன்வழங்குதல் பொறிமுறையின் வினைத்திறனை அதிகரிப்பதன் மீது கவனம் செலுத்துகின்ற கடன்பாட்டாளர்களின் கடன் விண்ணப்பங்களை பதிவுசெய்தல் மற்றும் பங்கேற்கின்ற நிதியியல் நிறுவனங்களின் மீள்நிதியிடல் விண்ணப்பங்களை செயன்முறைப்படுத்தலுடன் தொடர்புள்ள செயற்பாடுகளை தன்னியக்கப்படுத்துவதற்கு நாம் திட்டமிடுகிறோம். இதனூடாக, பொருளாதாரத்தின் தேவையான துறையினருக்கான கொடுகடன் பாய்ச்சலை விரைவுபடுத்துகின்றது.

முன்னோக்கிச் செல்கையில், வழங்கப்படும் ஏனைய நிதியியல் அல்லாத ஆதரவுடன் இணைந்த மேம்பட்ட கடன்வழங்கல் பொறிமுறையானது மத்திய வங்கியின் பிராந்திய அபிவிருத்தி முயற்சிகளை கணிசமானளவு அதிகரிக்கும். இம்முயற்சிகள் அரசாங்கத்தின் தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் இலக்குகளை எய்துவதற்கு ஆதரவளிக்கப்படும்.

## 5. முடிவுரைக் குறிப்புக்கள்

சீமாட்டிகளே, கனவான்களே வழிகாட்டல் தொடர்பான சுருக்கமான இத்தொகுப்பினை நான் முடிக்க விரும்புகிறேன். 2017ஆம் ஆண்டின் தொடக்கத்தில் எமது நாடு பல சவால்களையும் நிச்சயமற்றதன்மைகளையும் எதிர்நோக்கியிருந்தது. இருப்பினும் கூட, மத்திய வங்கியினாலும் அரசாங்கத்தினாலும் பின்பற்றப்பட்ட முன்கூட்டிய செயற்பாடு சார்ந்த உறுதியான கொள்கை வழிமுறைகளின் ஆதரவுடன் பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த உறுதிப்பாட்டினை அடைவதனை நோக்கி நாம் உறுதியாக முன்னேறியிருக்கிறோம். எனினும், இதுவரை அடையப்பட்ட சாதனைகள் தொடர்பில் நாம் முழு நிறைவினை அடைய விரும்பவில்லை. அத்துடன் நாட்டின் ஒட்டுமொத்த பேரண்டப் பொருளாதாரச் செயலாற்றத்தினை குறைத்துவிடுகின்ற பல சவால்கள் இன்னமும் தொடர்ந்திருப்பதனை நாம் ஏற்றுக்கொள்கிறோம். எமது மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கு இயலுமைப்படுத்தக்கூடிய சூழலொன்றினை உருவாக்கும் பொருட்டு நிரந்தர அடிப்படையொன்றில் பொருளாதாரத்தின் உறுதிப்பாட்டினை மீண்டும் அடைந்து கொள்வதற்கு நாம் கடினமாக உழைத்தல் வேண்டும். அத்துடன் வழிகாட்டலில் குறிப்பிடப்பட்டுள்ள கொள்கைகள் இம்முயற்சியை அடைய எமக்கு உதவுமென நாம் நம்புகிறோம்.

அதேநேரம், அரசாங்கத்தின் தொலைநோக்கில் எதிர்பார்க்கப்பட்டவாறான வளமான நாடொன்றாக நாம் மாற வேண்டுமாயின் நாட்டின் வளர்ச்சி உள்ளார்ந்த வளத்தினை அதிகரிப்பதற்கு பரந்த அடிப்படையிலான சீர்திருத்தங்களும் கடப்பாடுகளும் எமக்குத் தேவையாகும். பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டிற்கான முகவர் என்ற முறையில் தாழ்ந்ததும் உறுதியானதுமான பணவீக்கத்தினைப் பேணுதல், நிதியியல் உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்துதல் என்பனவற்றினூடாக பொருளாதார வளர்ச்சியை உயர்த்துவதற்கு மத்திய வங்கி எப்பொழுதும் அரசாங்கத்துடன் கைகோர்த்து செயலாற்றும்.

வழிகாட்டலில் குறிப்பிடப்பட்டுள்ள எமது எதிர்காலக் கொள்கை நெறிப்படுத்தல்களும் நடவடிக்கைகளும் எதிர்காலத் திட்டங்கள் தங்களுக்கு வழிகாட்டியாகவும் நாட்டின் பரந்த கொள்கைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் தங்கள் நடவடிக்கைகளை வடிவமைக்கவும் நேர்ப்படுத்திக் கொள்ளவும் உதவும். இயக்கவாற்றல் மிக்க பேரண்டப் பொருளாதார நிலைமைகள் மற்றும் சந்தை அபிவிருத்திகளினால் தேவைப்படுத்தப்பட்டவாறு, வழிகாட்டலில் புதிய கொள்கைகளையும் வழிமுறைகளையும் அறிமுகப்படுத்துவதற்கு நாம் தயாராக இருக்கவில்லை என்பதனை குறிப்பிட விரும்புகிறோம். அதிகரித்துவரும் இடர்நேர்வுகள் மற்றும் நிச்சயமற்றதன்மைகள் அதேபோன்று விரைவான மாற்றங்களைக் கொண்ட இவ்வுலகில் இந்நெகிழ்ச்சித்தன்மை அவசியமானது.

அதேபோன்று, அரசாங்கம் அதன் இறைத்திரட்சி வழிமுறைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளுமென நாம் வலுவாக நம்புகிறோம். இது பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினை நோக்கிய எமது கொள்கைகளைத் தொடர்வதற்கு உதவும். குறிப்பாக, திட்டமிடப்பட்டவாறு நாணயக் கொள்கைக் கட்டமைப்பொன்றாக நெகிழ்ச்சித்தன்மையுடைய பணவீக்க இலக்கிடலை வெற்றிகரமாகப் பின்பற்றுவதற்கு இது அவசியமான நிபந்தனையொன்றாக இருக்கும்.

எனது இப்பேச்சினை நிறைவு செய்வதற்கு முன்னராக மத்திய வங்கியின் எமது தொழிற்பாடுகளை காத்திரமான முறையில் மேற்கொள்வதற்கான எமது முயற்சிகளுக்கு நிலையாக பங்களிப்பினையும் ஆதரவினையும் வழங்கிய பல்வேறு தனிப்பட்டவர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

முதன்மையானதும் மிக முக்கியமானதுமாக, மேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் மாண்புமிகு பிரதம அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் அவர்களது வழிகாட்டல்களுக்கும் தலைமைத்துவத்திற்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் மாண்புமிகு நிதி மற்றும் பொதுமக்கள் தொடர்பு அமைச்சரான மங்கள சமரவீரவிற்கு அவரது ஆதரவிற்காக, குறிப்பாக, நிதி அமைச்சிற்கும் மத்திய வங்கிக்குமிடையிலான நெருங்கிய ஒத்துழைப்பினை உறுதிப்படுத்துவதற்கு எடுக்கின்ற ஒவ்வொரு முயற்சிக்காகவும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய வங்கியின் நாணயச் சபை உறுப்பினர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட அளவிறந்த ஆதரவிற்கும் முன்மதியுடைய உள்ளீடுகளுக்கும் நான் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாணயச் சபையில் நிலையான ஒன்றிலொன்று சார்ந்த நடவடிக்கைகளுக்காவும் ஆழ்ந்த சிந்தனைகளுக்காகவும் திறைசேரி செயலாளர் முனைவர் ஆர்.எச்.எஸ் சமரதுங்க, திருமதி மனோகரி இராமநாதன், திரு. கிறிஷாந்த பெரேரா மற்றும் திரு. நிஹால் பொன்சேகா ஆகியோருக்கு எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும். மூத்த துணை ஆளுநர் முனைவர் நந்தலால் வீரசிங்க மற்றும் துணை ஆளுநர்களான திரு. கே.டி. ரணசிங்க மற்றும் திரு. சி.ஏ.பி. சிறிவர்த்தன ஆகியோரின் அளப்பரிய ஆதரவிற்கும் அவர்களது மிக உயர்ந்த தொழில்சார் நிபுணத்துவ ஆலோசனைகளுக்கும் விதந்துரைப்புக்களுக்கும் நான் நன்றியுடைவனாவேன். 2017இல் வங்கிப் பணிகளிலிருந்து ஓய்வுபெற்ற முன்னாள் துணை ஆளுநர்களான திரு. பி. சமரசிறி மற்றும் திரு. எஸ். லங்காதிலக ஆகியோருக்கு அவர்கள் ஆற்றிய அளப்பரிய பணிகளுக்காக எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இறுதியாக, துணை ஆளுநர்கள், மூத்த திணைக்களத் தலைவர்களுக்கும் குறிப்பாக, பொருளாதார ஆராய்ச்சிப் பணிப்பாளர் மற்றும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்களுக்கு இக்கொள்கை ஆவணத்தினைத் தொகுப்பதற்கு அவர்கள் ஆற்றிய முயற்சிகளுக்காவும் எனது மனப்பூர்வமான நன்றிகதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். உண்மையில் மத்திய வங்கியின் குறிக்கோள்களினை நிறைவேற்றுவதற்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றிய அனைத்து அலுவலர்களுக்கும் நாட்டின் சிறந்த எதிர்காலத்திற்காக தமது தொழில்சார் நிபுணத்துவத்தினை, தொழில்நுட்ப சிறப்புத்தன்மையினை மற்றும் நாட்டின் சிறந்த ஒருமைப்பாடு என்பனவற்றைப் பேணியமைக்காவும் அனைத்து அலுவலர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நாளாந்தம் என் பணிக்கு உதவும் ஆளுநர் செயலகத்திலுள்ள என் நண்பர்களுக்கு எனது விசேட நன்றிகள் உரித்தாகட்டும். நாட்டின் முன்னேற்றத்திற்காக தங்களது தொழில்

நிபுணத்துவம், தொழில்சார் தேர்ச்சி மற்றும் நம்பகத்தன்மையைப் பேணுவதுடன் மத்திய வங்கியின் குறிக்கோள்களைப் பூர்த்தி செய்வதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படும் மத்திய வங்கியின் சகல ஊழியர்களுக்கும் நான் நன்றியைத் தெரிவிக்கின்றேன். இருப்பினும், இந்த தலைசிறந்த நிறுவனத்தில் எதிர்பார்க்கப்படும் மிகவும் உயர்ந்த தரங்களுக்கேற்ப மத்திய வங்கி ஊழியர்களின் ஓர் சிறிய சிறுபான்மை நடந்து கொள்ளவில்லை என தெரிய வந்துள்ளது. இவ்வகையான சந்தர்ப்பங்களில் எதிர்காலத்தில் இவ்வகையான தவறுகளை நிறுத்துவதற்கான உறுதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தங்களுக்கு நன்றி, தங்கள் எல்லோருக்கும் 2018ஆம் புத்தாண்டு மகிழ்ச்சிகரமானதாகவும் சுபீட்சம் நிறைந்ததாகவும் அமைய வாழ்த்துகிறேன்.